4058

செந்தமிழ்

தொகுதி—75 | ஜூன் 1981 | பகுதி 2

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

ஆசிரியர் :
டி. பி. எம். பெரியசுவாமி

செந்தமிழ்

தொகுதி—75 ஜூன் 1981 பகுதி

உள்ளுரை

எண்	பொருள்	பக்கம்
1.	வடசொல்லாராய்ச்சி —கவிராச பண்டித. இராமசுப்பிரமணிய நாவலர்	277
2.	கற்றறிதல் - ஒன்ரு? இரண்டா? —பண்டித புலவர் வை. தங்கமணி	280
3.	குழித்துறை வட்டார நாட்டுப்புற கதைகளின் அமைப்பு பற்றிய ஆய்வு —ஜா. சிந்தி கயல், எம். ஏ., எம். பில்.	285
4.	மதுரை சுல்தானியர் வரலாறு —எஸ். எம். ஏ. காதர், பி. ஏ.,	293
5.	கரந்தை தமிழ்ச் சங்க வரலாறு —இரா. சின்னத்தம்பி, M. O. L. M. Phil.	301
6.	இலக்கியத்தின் இமயமலை கு. சதாசிவன், M. A., M. Phil.	307
7.	கல்கத்தா, ஓ கல்கத்தா —பழனி. அரங்கசாமி	316
8.	கொட்டும் மழை	326

வடசொல்லாராய்ச்சி

கவிராச பண்டித
இராஜசுப்பிரமணிய நாவலர்:

தமிழில் பயிலும் வடசொற்கள் பல. அவை தமிழில் வழங்கப் படுவதற்கு இலக்கணங் கூறினார் தொல்காப்பியர்.

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா குமமே" (தொல்-சொல்)

அவை செய்யுளில் இடம் பெறுதற்குரியவை என்பதை,

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே"

என்பதனால் உணர்த்தினார்.

பின்வந்த இலக்கண நூலார் பலர் வடசொல் தமிழில் வருவதற்கு விரிந்த இலக்கணமும் வடசொற்களுக்கு இலக்கணமும் கூறினார். வீரசோழியம், நேமிநாதம், பிரயோக விவேகம், நன்னூல் முத்துவீரியம முதலிய இலக்கண நூல்களைக் காண்க.

பண்டைத் தமிழ் நூல்களில் வடசொற்கள் அரிது பயின்றன. பிற்கால நூல்களில் அவை மிகப் பல்கின. அவற்றுள் சிலவற்றை ஈண்டு அகராதி வரிசையில் தருகின்றோம்.

வட சொற்களை வகுத்தறிய மாட்டாது, பலர் வடசொற்களைத் தமிழென மயங்கித் தம் உரைகளிலுஞ் செய்யுட்களிலும் பயன்படுத்து கின்றனர் அவற்றைத் தமிழ்ச் சொற்கள் என யாப்புறுத்தற்குப் பொருந்தாதவற்றைக் கூறுவாரும் உளர். மொழி, பல சொற்களையும் வேண்டி நிற்கும். ஆகையால், வடசொற்களையும் திசைச் சொற்களையும் வழங்குதல் குற்றம் என்று முற்றும் கடியலாகாது. ஆயினும், தமிழ்ச் சொற்கள் உள்ளவிடத்துப் பிற சொற்களை வழங்குதலை இயன்றளவு நீக்கல் நன்று. தூய தமிழ் நடை யாவராலும் பாராட்டத் தக்கதே. கீழ்வரும் சொற்களை ஆய்ந்து உணர்வது வடசொற்களை வகுத்தறிய உதவும். இவற்றுட் சில, தமிழ்ச் சொற்கள் எனக் கோடற்கும் வடசொற்கள் எனக் கோடற்கும் உரிய. எனவே அவற்றைத் தமிழ்ச் சொற்களாகப் பயன்படுத்துவதும் பழுதுபடாது

அகத்தியன் என்பது ஒரு வடசொல்லின் திரிபு என்பாரும் தனித்-தமிழ்ச் சொல் என்பாரும் உளர். தமிழுக்கு அகத்தியமானவன் அகத்தியன் எனக் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. அகத்தியம் என்பதொரு சொல் அவசியம் என்னும் பொருளில் பண்டைத் தமிழ் நூல்களில் வழங்கினதில்லை அகச் சிறப்புடையவனாகத் தழுவிக் கொள்ளத் தக்கவன் என்றாற் போலும் பிற பொருள்களும் நலிந்து கொள்ளப் பெறுவன-வாகும்.

அகத்தியனுக்குப் பிறிது பெயராகிய கும்பசம்பவன் என்னும் வடசொல்லைத் தமிழ் நூல்கள் குடமுனி எனக் கூறும். கும்பமுனி, கலசமுனி என்பனவும் பிற்றை நூல்களில் வருகின்றன.

அம்பு என்பது நீர் என்னும் பொருளில் வரும் ஒரு வடசொல்லின் திரிபு. 'நீர்' என்னும் பொருளில் அம், ஆம் என வருவனவும் இதன் திரிபு எனக் கொள்ளத்தக்கன என்பார் உளராயினும் அவற்றைத் தமிழாகக் கொள்வதும் இழுக்கன்று.

அமைச்சு என்பது அமாத்ய என்னும் வட சொல்லின் திரிபு அமாத்தியன் (அரசன்) பக்கத்தில் இருப்பவன் இதனை வள்ளுவனார் 'உழையிருந்தான்' என மொழி பெயர்த்து வழங்கியுள்ளார். மன்னற-வியலை அமைப்பவன் என்னும் பொருளில் இது தமிழ்ச் சொல் எனவும் படும்.

அரக்கன் என்பதும் ஒரு வடசொல்லின் திரிபு. அரக்குபவன் அரக்கன் எனக் கூறித் தமிழ்ச் சொல்லாகக் கோடல் பொருந்தாது. அரக்கர் தமிழ் நாட்டவர் அல்லர்.

அரக்கு என்பது 'லாக்ஷா' (ராக்ஷா') என்னும் வடசொல்லின் திரிபு. அரக்கப் படுவது அரக்கு என்றும் கூறுப. 'ல' கரகம் 'ர' கரமாகத் திரியும்

அலத்தகம் என்பது ஒரு வடசொல்லின் திரிபு. செவ்வரக்கு என்பது பொருள். செம்பஞ்சுக் குழம்புமாம்

அரி என்பது பாம்பு என்னும் பொருளில் ஹரி: என்னும் வடசொல்லின் திரிபு. இச்சொல் பல பொருள்பட வழங்கும்.

ஆடி என்பது ஒரு வடசொல்லின் சிதைவு. இதனைத் தமிழ்ச் சொல் என்பாரும் உளர். திங்கட் பெயர்களில் 'ஆனி' என்பது ஒன்றே தமிழ் எனல் வேண்டும். நாட்பெயர்களும் பரக்க வழங்குவன வட சொற்களே. இவற்றுக்கு உரிச் சொன்னூல்களில் (நிகண்டுகளில் வரும் சொற்கள் எளிதில் பொருளறிய வாரா.

ஆலவட்டம் என்பது தாலவிருந்தம் என்னும் வடசொல்லின் திரிபு. 'பனையோலையால் செய்யப்பட்டது' எண்பது பொருள். (தாலம்) பனை; விருந்தம் - தொகுதி.)

ஆவணி என்பது ஒரு வடசொல்லின் திரிபு. 'ஓணம்' என்பதும் இதன் பிறிதொருவகைத் திரிபே. 'ஓணம்' என்பது மலையாள நாட்டில் பெருவழக்கிற்று.

(தொடரும்)

கற்றறிதல் - ஒன்றா? இரண்டா?

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

—பண்டித. புலவர் வை. தங்கமணி

கம்பராமாயணம் யுத்தகாண்டம் இராவணன மந்திரப் படலத்தில் இராவணனைப் பார்த்துக் கும்பகர்ணன் கூறுமிடத்து (பாடல் 48)

"நீயயன் முதற் குலம்
இதற்கு ஒருவன் நின்றாய்
ஆயிரம் மறைபொருள்
உணர்ந்து அறிவு அமைந்தாய்!
தீவினை நயப்புறுதல்
செய்வினை தெரிந்தாய்
ஏயின உறத்தகைய
வித்துணைய வேயோ!"

—என்னும் பாடலில்

பிரம தேவனை முதலாகக் கொண்ட இக்குலத்தின் ஒப்பற்ற-வனாய் இருந்தாய்! ஆயிரம் கிளைகளாக இருந்த சாமவேதத்தின் பொருளை ஆராய்ந்து அறிந்து பெருமதிப்புடன் பொருந்தியுள்ளாய்! ஆயினும் நெருப்பை விரும்பி ஏற்றுக் கொண்டால் எரிந்து விடுவோம் எனக் கருதாது அதன் செந்நிறத்தைப் பார்த்து விரும்புவதைச் செய்யத் தக்க செயலாகக் கருதினாய்! விதியினால் ஏவப்பட்ட-வனாய் விளையக் கூடியன இம்மாத்திரம் தானோ?

இதில், 'ஆயிரம் கிளைகளாக அமைந்த சாமவேதத்தைக் கற்றதோடு அமையாது அதன் உட்பொருளை எல்லாம் ஆராய்ந் தறிந்த அறிவு பெற்றுப் பெருமதிப்புடன் பொருந்தினாய்!' என்பதி லிருந்து கற்றலுக்கும் அறிதலுக்குமுள்ள வேறுபாட்டினை அறிக.

விபீடணன் இந்திரசித்துக்குக் கூறியதாக அமைந்த 69 ஆம் பாடலில்:-

'நூலினால் நுணங்கிய அறிவு நோக்கினை
போலுமா லுறுபொருள் புகலும் பூட்சிபோல்
காலமேல் விளைபொருள் உணரும் கற்பிலாப்
பாலனீ யினையன பகரற் பாலையோ?' எனுமிடத்து

இக்காலத்துக்கு ஏற்ற விடயத்தைக் கூறவேண்டும் என்னும் கொள்கை உடையவனே! சாத்திரங்களினால் நுணுக்கமாகக் கூறப்பட்டுள்ளவற்றை உன்னுடைய கூர்மையான அறிவினால் நுணுகி அறிந்தாய் போல் பேசுகிறாய். காலத்தையும், மேல் விளையப் போகும் விடயத்தையும் உணர்தற்கு ஏற்ற கல்வியறிவு இல்லாத பாலனாய் உள்ளாய் நீ.

இப்பாடலில், 'நூலினால் நுணங்கிய அறிவு, என்றும், காலமேல் விளைபொருள் உணரும் கற்பிலாப் பாலன்' என்றும் கூறுவதிலிருந்து. கற்றல்', 'அறிதல்' வேறவேறு என்பது வெளிப்படுகிறது அல்லவா?

இராவணனுக்கு விபீடணன் கூறியதாக உள்ள அப்படலத்தின் 74 - ஆம் பாடலில்:-

'கற்றுறு மாட்சியென் கண்ணின் றாயினும்
உற்றுறு பொருள் தெரிந்து உணர்த லோயினும்
சொற்றுறு காட்சியின் துணிவு சேரினும்
முற்றுறுறக் கேட்டபின் முனிதி மொய்ம்பினோய்!,

—என்னும் இப்பாடலில் கற்றதனால் ஏற்படும் பெருமை என்னிடத்து இல்லையாயினும், இப்போது நேர்ந்துள்ள பெருவிடயத்தை முற்றும் ஆராய்ந்து சொல்லவல்ல அறிவெனக் கில்லாவிட்டாலும், எனப் பொருள் கொள்ளும்போது கற்றலினால் ஏற்படும் அறிவும், ஆராய்ந்து சொல்லவல்ல அறிவும் என்று கம்பன் கற்றலையும் அறிதலையும் வேறுபடுத்திக் காட்டுகிறான்.

கா. நமச்சிவாய முதலியார் தாம் எழுதிய 'கயவன் கல்வியருமை அறிந்தது' என்ற கதைபொதி பாடலில்,

'கற்றறி வில்லா மாந்தர்
    கண்கெட்ட மாடே யாவர்
மற்றவர் மண்ணின் மீதே
    மடமையில் மாழ்கி நிற்பர்
உற்றமற் றவர்க ளிந்த
    உலகுக்கோர் சுமையே யாவர்
பெற்றவர் செய்த பாவம்
    பிள்ளையாய்ப் பிறந்த தாமே!

என்னும் பாடலில் 'கற்றறி வில்லா மாந்தர்' எனும்போது 'கற்றலுக்கும் - அறிதலுக்கும்' வேறுபாடு உண்டு என்பதைக் காட்டுகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வரகவி' புரட்சிக்கவி' பாரத நாட்டில் பாரதம் ஓட்டிய பாரதி - கவிச் சாரதி என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர் தாம் எழுதிய 'பாஞ்சாலி சபதம்' என்னும் நூலில் தருமன் சூதாடும் இடத்தில் பாரதியார் மனம் பொறுக்காது சாடுவதைக் கேளுங்கள்.

கோயிற் பூசை செய்வோர் -- சிலையைக்
 கொண்டு விற்றல் போலும்
வாயிற் காத்து நிற்போன் — வீட்டை
 வைத்து இழத்தல் போலும்
ஆயிரங்க ளான — நீதி
 அவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் — சீச்சீ
 சிறியர் செய்கை செய்தான்!

ஈங்கு தருமன் சூதாடியதற்குக் காட்டிய உவமையைச் சுவைத்து இன்புறுவதோடு, சூதாடியவன் யார்? ஆயிரங்களான நீதி அனைத்தையும் உணர்ந்தவன்! ஆமாம் தருமன்! செய்த செயல். நாடு வைத்துச் சூதாடியது சிறியவர் செயல் என்பதை விளக்க 'ஆயிரங்களான நீதியைக் கற்றவன், என்னாது 'உணர்ந்தவன்' என்றல்லவா சாடுகிறார்!

இதுவரைக்கும் பாடல் ஆசிரியர் சில நுடைய கருத்துகளைக் கண்டோம். தொடர்ந்து ஒல்காப் புகழ் தொல்காப்பியத்திற்கு உரை கண்ட பல்லாருள்ளும் ஒருவராகிய 'பேராசிரியர் மெய்ப்பாட்டி-யலுக்குக் கண்ட 273 ஆம் சூத்திர உரையை ஈண்டுக் காண்போம்.

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே"

- மெய்ப்பாட்டியல் : 273ஆம் சூத்திரம் -

பேராசிரியர் உரை ;

இதுவும் அம் மெய்ப்பாட்டுப் பகுதியே கூறுகிறது. மேற் களவியலுள்.

'ஒத்த கிழவனும் கிழத்தியுங் காண்ப' (தொல்: பொருள் 93) என்றான், அவ்வொப்பினது பகுதி இத்துணைக் குறிப்பு உடைத் தென்பது உணர்த்தினமையின்.

ஒத்த பிறப்பும், ஒத்த ஒழுக்கமும், ஒத்த ஆண்மையும், ஒத்த பிராயமும் ஒத்த உருவும், ஒத்த அன்பும், ஒத்த நிறையும், ஒத்த அருளும், ஒத்த அறிவும், ஒத்த செல்வமும் எனப் பத்து வகைய தலை மகளொப்பினது பகுதி என்றவாறு என்று பொருள் எழுதி விட்டு மேலும் அத் தொடர்களுக்கு விளக்கம் எழுதுமிடத்து,

"உருவு நிறுத்த காம வாயில்" என்பது, பெண்மை வடிவும் ஆண்மை வடிவும் பிறழ்ச்சியின்றி அமைந்த வழி அவற்றுமேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பென்றவாறு.

இங்ஙனம் ஓதிய வகையான் இவை ஒன்பதாகலிற் பத்தாமா-றென்னை யெனின் காம வாயிலெனப்பட்ட இயற்கையன்பு வடிவு பற்றியல்லது தோன்றாமையானும், குணம் பற்றித் தோன்றுவன செயற்கையின் பாலதாகலானும், உருவினை அன்பிற்கு அடையாளமாக கூறினானாயினும் உருவு சிறப்புடைமையின் அதனை நாம் பகுத் தெண்ணிக் கொண்டா மென்பது, என்னை?

'வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு' - குறள்; 632.

என்புழிக் 'கற்றறிதல்' என்பதனை இரண்டாக்கி ஐந்தென்பவா-கலின் ..' என்று உரைவகுத்துச் செல்கிறார்.

இதுகாறும் 'வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினை-யோ டைந்துடன் மாண்ட தமைச்சு' என்ற வான்புகழ் வள்ளுவன் பாடலுக்குப் பின்னதை முன்னதோடு கூட்டுதல் தேவையற்றது என்றும், வள்ளுவர் தாம்கூறுவதை மிக அழுத்தமாகக் கூறும் தன்மை உடையவர் என்றும், எண்ணியும் முடித்தும் காட்டும் வழக்குடையவர்

என்றும், 'கற்றறிதல்' ஒன்றல்ல 'கற்றலும் - அறிதலும்' என இரண்டாகும் என்பதற்கு அகச் சான்றுகளோடு சங்க காலத்தில் இருந்து இருபதாம் நூற்றாண்டைய பாரதி காலம் வரையுள்ள புலவர்கள் கூறிய கருத்துகளோடு - தொல்காப்பிய உரையாசிரியரான 'பேராசிரியர்' உரையையும் சான்றாகக் கண்டோம்.

எனவே பரிமேலழகர் 'கற்றறிதலை' ஒன்றாகக் கொண்டது முரணானது - அதனை இரண்டாகக் கொள்ளலே ஏற்புடைத்தென்பதை அறியலாம்.

சீசரின் மறுமொழி

"அஞ்சினர்க்குச் சத மரண மஞ்சாத நெஞ்சத்
தாடவனுக் கொரு மரண மவனிமிசைப் பிறந்தோர்

துஞ்சுவரென் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுக்குந்
துன்மதி மூடரைக் கண்டாற் புன்னகை செய்பவன் யான்

இன்னலும்யா னும்பிறந்த தொரு தினத்தி லறிவாய்
இளஞ்சிங்கக் குருளைகள்யாம் யான்மூத்தோ னெனது

பின்வருவ தின்னலெனப் பகைமன்ன ரறிவார்
பேதுறல்பெண் ணணங்கேயான் போய் வருதல் வேண்டும்"

— முன்னிரவில் கண்ட உற்பாதங்களினால் அரசவைக்குச் செல்லற்க என்று கூறிய மனைவிக்கு சீசர் கூறியது

—மதங்க சூளாமணி.

குழித்துறை வட்டார நாட்டுப்புற கதைகளின் அமைப்பு பற்றிய ஆய்வு

— ஜா. சிந்தி சயல், எம். ஏ., எம். பில்
கேரளப் பல்கலைக் கழகம்

முன்னுரை :

குழித்துறை வட்டாரம் கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு பகுதி. நாகர்கோவிலுக்கும் திருவனந்தபுரத்திற்கும் நடுவில் இது அமைந்துள்ளது. கல்வி நிலையிலும் வாழ்க்கைத் தரத்திலும் பின்தங்கியிருந்த இப்பகுதி, தற்போது பல நிலைகளிலும் வளர்ந்து கொண்டிருக்கிறது

இப்பகுதியிலிருந்து தொகுக்கப்பட்ட நூற்றிப்பதினொரு நாட்டுப்புறக் கதைகளில், பொதுமைப் பண்புகள் மிகுந்துள்ள குறிப்பிட்ட ஐம்பது கதைகளின் உள்ளமைப்புக்களை ஆராய்ந்தமையான் கிடைத்த முடிவுகளே இக்கட்டுரைக்கு நிலைக்களனாய் அமைகின்றன.

அமைப்பியலாய்வு — விளக்கம் :

ஒரு இலக்கியத்தின் உள்ளமைப்பினை ஆராய்வதுதான் அமைப்பியல் ஆய்வு. உள்ளமைப்பு என்பது, ஒரு இலக்கியத்தில் இணைந்துள்ள பல கூறுகளை (Units), மேலும் பகுக்க முடியாதபடி சிறுசிறு கூறுகளாகப் பகுத்து, அக்கூறுகளுக்கிடையேயுள்ள தொடர்பினையும், அக்கூறுகள் இணைந்த அவ்விலக்கியத்தின் முழுமையினையும் காட்டுவது எனலாம்.

ஒட்டுமொத்தமான கதைக்குள் பகுக்கக்கூடியனவாய் அமைந்துள்ள கதைக் கூறன்கள் ஒவ்வொரு கதைக்கும் வேறுபட்டு அமையலாம். சான்றாக ஏழு கதைக்கூறன்கள் அடங்கிய ஒரு கதை கீழே தரப்பட்டுள்ளது :

"எருமையின் மூக்கில் தேன் வெட்டிய கதை"

தேன் குடிக்க விரும்பிய ஒருவன் தேன் கிடைக்கும் இடத்தினைப்பற்றிப் பிறரிடம் விசாரித்த போது, இவனைபபற்றி முற்றும் உணராத அம்மேதாவிகள் சுருக்கமாக ஈ (தேனீ) இருக்குமிடத்தில் தேன் கிடைக்கும் எனக் கூறினர்.

எருமையின் மூக்கில் ஈ இருப்பதைக் கண்ட அந்த அறிவிலி அங்கும் தேன் உளதென்று திரிபுபட உணர்ந்து அதன் மூக்கினை வெட்டத் தொடங்கினான் எருமை இறந்தது. தேனும் கிடைக்கவில்லை

இக்கதையினைக் கீழ்க்கண்ட கதைக் கூறன்களுக்குள் வகைப் படுத்தலாம்:

குறை	முயற்சி	பணி	தவறாக உணர்தல்	பணிநிறை வேற்றல்	முடிவு
ஒருவன் எப்படியாயினும் தேன் குடிக்க விரும்புதல்	2 பிறரிடம் தேன் கிடைக்கும் இடம் விசாரித்தல்	3 ஈ (தேனீ) இருக்கும் இடங்களில் தேன் வெட்டக் கருதுதல்	1 எந்த ஈ இருந்தாலும் அங்கெல்லாம் தேன் கிடைக்கும் எனத் திரிபுபட எண்ணுதல்	5 ஈயைக் கண்ட இடங்களிலெல்லாம் தேன் வெட்டல்	7 எருமை இறக்க, தேன் வெட்டுதலையும் நிறுத்தல்
	6 எருமையின் மூக்கில் ஈ இருக்கக் கண்டு தேன் வெட்டுதல்				

மேனாட்டில் அமைப்பியலாய்வு:

அமைப்பியலாய்வு 1920, '30-லேயே மொழியியல், உளவியல் பண்டை இசையியல், மானிடவியல் போன்ற பிற துறைகளில் நடைபெற்றது. நாட்டுப்புறக்கலை மட்டும் குறுகிய நோக்குடைய வரலாற்றுத் துறையில் (Historical approach) அடைபட்டுவிட்டது. நாட்டுப்புறக்கலைத் துறையில் இத்தகைய அமைப்பியல் அணுகுமுறை. அதாவது கலை வடிவத்தை முழுமையாகக் காணும் முறை (Holistic approach) வளரவில்லை நாட்டுப்புறக்கலைத் துறையில் ஸ்டித் தாம்சனுடைய (Stith Thompson குறிப்பு அடைவுதான் (Motif Index பெரிய சாதனையாகக் கருதப்பட்டது.

1928-ல் முதன் முதலில் விளாடிமிர் பிராப் (Vladimer Propp) 'நாட்டுப்புறக் கதைகளின் உள்ளமைப்பு' (Morphology of (Folk Tales) என்ற தலைப்பின் கீழ் உருசிய நாட்டு நூறு தேவதைக்

கதைகளின் (Fairy tales) உள்ளமைப்பை ஆராய்ந்து அமைப்பியலாய்வு முறையைப் புகுத்தினார். இவர், உள்ளமைப்பை ஆராய்வதற்கான ஓர் அடிப்படை அலகை (Basic unit)ச் செயல் (Function) என்று குறிப்பிட்டார். இவர் ஆராய்ந்த நூறு கதைகளிலுமாக 31 செயல்கள் இருப்பதாகக் கண்டறிந்தார்.

இவரைப் பின்பற்றி ஆலன் டன்டிஸ், வடஅமெரிக்க இந்திய நாட்டுப்புறக் கதைகளை அமைப்பியல் முறையில் வகைப்படுத்தினார். (The Structural Typology in North American Indian Folktales). இவர், பிராப்பினுடைய 'செயல்' என்ற சொல்லைத் தவிர்த்து விட்டு பைக்கினுடைய 'கூறன்' (Motifeme) என்ற கலைச் சொல்லைக் கையாண்டார் இவரது ஆய்வின் மூலம் குறை, குறை நீக்கல், தடுத்தல், மீறுதல் விளைவு, தப்பமுயற்சி என்னும் அறுவகைக் கதைக்கூறன்கள் அமைந்திருப்பதைக் கண்டறிந்தார்.

லெவி ஸ்டிராஸ் (Levi-Strauss) என்னும் பிரெஞ்சு அறிஞர், கிரேக்க நாட்டுப் பழங்கதைகளின் கதைக் கூறுகளை ஆராய்ந்து வாழ்க்கை (Life), இறப்பு (Death), பெறுதல் (Gain), இழப்பு (Lose) என்னும் நான்கு பிரிவுகளின்கீழ் வகைப்படுத்தி, முரண்பட்ட கூறுகளைக் கொண்டு அமைப்பியல் முறையினை ஆராய்ந்தார்.

19-ம் நூற்றாண்டில் ஃபின்னிஷ் நாட்டில் வாழ்ந்த ஜூலியல்க் ரோஹன், காக்லிக்ரோஹன் ஆகியோர், நாட்டுப்புறக் கதைகளின் மூலவடிவத்தை ஆராயும் வரலாற்றுப் பூகோள ஆய்வுக்கு (Historical-Geographical Method) இந்த அமைப்பியல் கோட்பாட்டைப் பயன்படுத்தினர்.

தமிழிலக்கியத்தில் அமைப்பியலாய்வு :

மேனாட்டு அறிஞர்களின் அமைப்பு முறைகளைப் பின்பற்றித் தமிழிலக்கியத்தில் கெ.பி.எஸ். ஹமீது, பா ரா. சுப்பிரமணியன் தா. வே வீராசாமி, கி. நாச்சிமுத்து, ஆர்.வி சுந்தரம், தமிழவன் ஆகியோர் இத்துறையில் ஆராய்ந்து பல முடிவுகளைக் கண்டனர்

தா. வே. வீராசாமி பெரியபுராணக் கதைகளை செயல் (Function), தடை (Obstruction), தீர்வு (Solution), பயன் (Result) என்ற நான்கு கதைக்கூறன்கள் அமையும் அமைப்பாகக் கொண்டு, இக்

கூறன்களின் அடிப்படையில் மொத்தக் கதைகளை வெறுங்கதைகள், தனிவகைக் கதைகள், கலப்புக் கதைகள் என மூன்றாகப் பகுத்தார். இதனை அடிப்படையாகக் கொண்டு கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் ஒருசில ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன,

அமைப்பியலாய்வின் பயன் :

அமைப்பியலாய்வின் வாயிலாக, வகைப்படுத்தல் (Typology) மிகவும் எளிதாகிறது என்றும், குறிப்பிட்ட ஒரு நாகரிகத்தின் பண்பாட்டுக் கூறுகளை நிறுவுவதற்கு வழிவகுக்கும் என்றும், பண்பாட்டுக் கலவையை (Accultration) அறிய முடியும் என்றும், இலக்கிய வகைகளை ஒப்பிட்டுக் காணவும் (Cross-genre Comparison) கதைகளின் மூலவடிவத்தை அறியவும் (Proto type) வரலாற்றுப் பூகோள ஆய்விற்குக் கருதுகோள்களை (Hypothesis) உருவாக்கவும் முடியும் என்றும் அமைப்பியலாய்வை மேற்கொண்ட அறிஞர் பலரும் எடுத்துக் கூறியுள்ளனர்

குழித்துறை வட்டார நாட்டுப்புறக் கதைகளின் அமைப்பு :

பிராப், டன்டிஸ், சங்கிரி போன்றோரது ஆய்வில் கதைகளை ஒரே அமைப்பிற்குள் அடக்கியது போன்று அடக்க முடியாமல் கந்தபுராணக் கதை அமைப்பு போன்று சிக்கலான தனிப்பட்ட அமைப்புக் கூறுகளைக் கொண்டதாக, கதைக்கூறன்கள் அங்குமிங்கும் பின்னிப் பிணைந்து கிடக்கும் முறையில் குழித்துறை வட்டார நாட்டுப்புறக் கதைகள் அமைந்தவை அமெரிக்க இந்தியக் கதைகள் கட்டுக் கோப்பின்றி, கதைக் கூறன்களைத் தாறுமாறாகக் குவித்து வைத்திருப்பது போன்ற அமைப்புடையன எனக் கூறும் ஜோசப் ஜாக்கப்ஸ், போயஸ் ஆகியோரின் கூற்றுகளுக்கு ஏற்றாற் போன்று இவ்வட்டாரக் கதைகள் அமைந்துள்ளன. இவ்வாசிரியர்கள், கட்டுக் கோப்பற்ற இந்திய அமெரிக்கக் கதைகளை முதுகெலும்பற்ற உயிரினங்களுடன் ஒப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இக்கதைகள், கதைக்கூறன்கள் அடிப்படையில் கட்டுக்கோப்பற்ற முறையில் தென்பட்டாலும், அவையனைத்தும் பல வடிவங்களாக அமைந்து அறியாமை என்னும் ஒரே பொதுப்பண்பைக் கொண்டிருப்பது இக்கதைகளின் செறிவான தன்மையைக் காட்டுகின்றன.

மேலும், டன்டியின் கருத்துப்படி குறை / குறை நீக்கல் ஆகிய கதைக் கூறன்கள் ஐரோப்பியக் கதைகளில் பிரிக்கப்பட்டு கதையின் வெவ்வேறு இடங்களில் வருகின்றன. அமெரிக்க இந்தியக் கதைகளில் குறையை அடுத்து குறைநீக்கல் வந்து விடுகிறது என்று கூறியுள்ளார். ஆனால் குழித்துறை வட்டார நாட்டுப்புறக் கதைகளில் காணப்படும் பலவகையான கதைக் கூறன்கள், அவை, அவற்றின் சிக்கலான அமைப்பிற்கேற்ப வெவ்வேறு இடங்களில் பிரிந்து வருகின்றதைக் காட்டுகின்றன.

இவ்வட்டாரத்தினின்றும் தொகுக்கப்பட்ட கதைகளில் முற் கூறிய ஆய்வாளரின் கருத்துப்படி, கட்டுக்கோப்பான அமைப்புடைய கதைகளாக இரு கதைகளைக் கூறலாம்:

1 உருளு கொட்டு உருளு கதை

2. உருளு பத்தங்காய் உருளு கதை

இவ்விரு கதைகளிலும் பாத்திரங்களும் கருவிப் பொருட்களும் வேறாகக் காணப்பட்டாலும் குறை, செயல், தடை, மீட்சி, குறைநீக்கம், சிக்கல், தப்பமுயற்சி, விளைவு என்ற முறையில் கதைக்கூறன்கள் அமைந்து ஒரே கட்டுக்கோப்பான அமைப்பைக் காட்டுகின்றன.

டன்டிஸ், அமெரிக்க இந்தியக் கதைகளில் குறையை அடுத்து குறைநீக்கல் வரக் காரணம் சங்கிலித் தொடர்கதைகள் இல்லாமையால் தானிருக்கலாம் என்று கூறியுள்ளார். - ஆனால் குழித்துறை வட்டாரக் கதைகளில் சங்கிலித் தொடர் போன்ற கதைகள் பல இருப்பதோடு அவற்றில்தான் குறை/குறை நீக்கல் ஆகிய கதைக் கூறன்கள் அடுத்தடுத்து திரும்பத் திரும்ப வருவதைக் காண முடிகிறது.

(உ-ம்): வாலு முறிச்ச சொக்கனுக்க கதை.

கதைக் கூறன்கள் பற்றிய விளக்கம்

அமைப்பியலாய்வின் அடிப்படை அலகாக விளங்குவன கதைக் கூறன்கள். ஒரு கதைக்கூறன் என்பது செயல்களின் பல்வேறு விதமான மாற்றுச் செயல்களாக இருக்கும். கதையின் ஆரம்பத்தி-

லிருந்து முடிவு வரையிலும் கதைக்கூறன்களின் பின்னலினால் அமைக்கப்பட்டிருக்கும். ஒரு கதைக்கூறனில் ஒன்றுக்கு மேற்பட்ட கதைக்கூறுகள் அடங்கியிருக்கலாம்.

அமைப்பியலாய்வு செய்த ஐம்பது கதைகளிலும் 31 வகையான கதைக்கூறன்கள் காணப்படுகின்றன. இக்கதைக்கூறன்களுக்கும். கதைக்கூறன்களில் அடங்கியிருக்கும் செயல்களின் தன்மைக்கும் ஏற்ப, பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. [3][விரிவு கருதி அவை இங்கு விளக்கப் படவில்லை]. இக்கதைக்கூறன்களின் பின்னலினால் அமைந்து இணைந்து காணப்படும் கதைகளின் அமைப்பினைக் கீழே காணலாம்:

ஒரு கதை உருவாவதற்குக் குறைந்தது இரு கதைக்கூறன் களாவது தேவை. ஒரு கதைக்கூறனாலாகிய கதை முழுமை பெறாமல் துணுக்குக் கதையாக நிற்கும். ஒரு கதைக்கூறன் முதல் எத்தனை கதைக்கூறன்களும் ஒருகதையில் தொடர்ந்து வரலாம். இந்தக் கதைக்கூறன்களின் எண்ணிக்கையை வைத்துக் கதைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. ஒரு கதைக் கூறனால் ஆகிய கதை — துணுக்குக் கதை

2. இரு கதைக்கூறன்களின் இணைவினால் ஆகிய கதை — தனிக்கதை

3. மூன்று முதல் பத்து வரையுள்ள கதைக் கூறன்களின் இணைவினால் ஆகிய கதை — கூட்டுக்கதை

4. பத்திற்கு மேற்பட்ட கதைக்கூறன்களால் ஆகிய கதை —கலப்புக்கதை

இரண்டு கதைக் கூறன்களாலாகிய தனிக்கதைகளே ஒரு கதையின் வடிவம் பெறுகின்றன. கூட்டுக் கதைகளுடன் ஒரு தனிக்-கதை இணைந்து வரும்போது அவை பத்திற்கு மேற்பட்ட கூறன்களைக் கொண்டு கலப்புக் கதைகளாகின்றன. கூட்டுக்கதைக-ளுடன் ஒன்றிற்கு மேற்பட்ட தனிக்கதைகள் இணைந்து வரும்போது அவை மிகைக்கலப்புக் கதைகளாகின்றன. இவ்வாறு கூட்டுக் கதை-

களுடன் பின்னால் வந்து ஒட்டும் தனிக்கதைகளைப் பின்னொட்டுக்கள் எனலாம்.

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட கதைகளில் முக்கிய இடம் பெறுபவை கூட்டுக்கதைகளே. துணுக்குக் கதைகளும் தனிக்கதைகளும் இடம் பெறவேயில்லை. நான்கு முதல் பன்னிரெண்டு கதைக்கூறன்கள் வரையிலும் இணைந்து வரும் கதைகள் காணப்படுகின்றன. அதிலும் நான்கு கதைகளே கலப்புக் கதைகளாகக் காணப்படுகின்றன. மிகைக் கலப்புக் கதைகள் இடம் பெறவேயில்லை.

சங்கிலித் தொடர் அமைப்புடைய கதைகளில் ஒரே கதைக்கூறன் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கும். இவ்வாறு திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கும் கதைக் கூறன்களின் இணைவை அசைவு (moves) எனலாம் இவ்வமைப்புடைய ஒரு கதை இவ்வாய்வில் இடம் பெற்றுள்ளது 'வாலு முறிச்ச சொக்கனுக்க கதை.'

இந்நாட்டுப்புறக் கதைகளின் அமைப்பியலாய்வின் மூலமாகக் கதைகளில் கதைக்கூறன்கள் செறிந்து இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது. பல கதைக் கூறன்கள் ஒன்றன் பின் ஒன்றாகப் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. இக்கதைகளிடையே ஆலன் டன்டிஸ் வகுத்து போன்ற கட்டுக்கோப்பான ஒரே உள்ளமைப்புடைய வடிவத்தினைக் காண முடியவில்லை.

இக்கதைகளின் உள்ளமைப்புக்கூறுகளை நோக்கும்போது எல்லா கதைகளிலும் காணப்படும் பொதுமைக் கூறாக விளங்குவது மக்களின் அறியாமையே. இது கதைகளில் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ சுட்டப்பட்டுள்ளது, இதனால் அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த குழித்துறை வட்டாரப் பழஞ்சமுதாயத்தை அறுதியிடவும் தற்போதைய நிலையுடன் ஒத்துநோக்கி ஆராயவும் இவ்வமைப்பியலாய்வு பயனுள்ளதாக அமைந்துள்ளது எனலாம்.

சான்று விளக்கம்:

* 1978-ஆம் ஆண்டு கேரளப் பல்கலைக்கழகத் தமிழ் முதுகலைப்பட்டத் தேர்வின் ஒரு பகுதியாக இக்கட்டுரையாளரால் படைக்கப்பட்ட 'குழித்-

துறை வட்டார நாட்டுப்புறக் கதைகள்—ஓர் அமைப்பியல் ஆய்வு என்ற ஆராய்ச்சிக் கட்டுரை காட்டும் முடிவுகள் இங்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

1. Alan Dundes- The Structural Typology in North American Indian Folk tales, South Wisern Journal of Anthropology, Vol XIX. 1963, Translated into Tamil by Dr. P R. Subramanian.

2. Veerasamy, T V., —The legendary structure of Periapuranam Proceedings of the Second International Conference Semina of Tamil Studies, Madras, 1968

3. (1) பின்புலம் (2) செயல் (3) எதிர்செயல் (4) குறை (5) முயற்சி (6) குறைநீக்கல், (7) தடை (8) அறியாமை (9) பணி (10) பணிநிறைவேற்றுதல் (11) முடிவு (12) விளைவு (13) வஞ்சனை (14) ஏமாற்றம் (15) தீச்செயல் (16) சோதனை (17) தோல்வி (18) தடுத்தல் (19) தீர்வு (20) தவறுசுட்டல். (21) இயல்பு (22) விதி (23) தவறாகஉணர்தல் (24) மீறுதல் (25) பலன் (26) மீட்சி (27) இடையீடு (28) தப்பமுயற்சி (29) சிக்கல் (30) போராட்டம் (31) உணர்தல்

மதுரை சுல்தானியர் வரலாறு

— எஸ். எம். ஏ. காதர். B. A.
ஹாஜி P. S. M மேல்நிலைப் பள்ளி ... விருதுநகர்

மதுரை பாண்டியர்களின் தலைநகரம். இந்நகரம் சங்கம் வைத்துத் தமிழாய்ந்த தொன்னகரம் சைவமும் வைணவமும் தழைத்த பொன்னகரம் இந்நகரின் ஒப்பரிய வரலாறு கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஒரு திருப்பு முனையைக் கண்டது. முன்னர்ச் சைவமும் வைணவமும் வேரூன்றித் தழைத்த மதுரையில் அரபு நாட்டில் பிறந்த இஸ்லாம் என்னும் புதிய சமயம் கால் கொள்ளத் தொடங்கியது. அதன் விளைவால் முகமதியர் பேசும் அரபு, உருது, பாரசீகம் ஆகிய மொழிச்சொற்கள் தமிழுடன் காலப்போக்கில் விரவின

''கடிசொல் இல்லை காலத்துப் படினே'' (தொல் - சொல்) என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது பிறமொழிக் கலப்பு ஏற்படினும், தமிழின் பொலிவும், வலிவும் குன்றவில்லை என்பதை.

''ஆரியம்போ லுலக வழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே ...

என்று மனோன்மணியம் வாழ்த்துவதனால் உணரலாம்.

பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னர் உருது, பாரசீகம் போன்ற அயல் மொழிகளின் கலப்பிற்குக் காரணமாக இருந்த முகமதிய சுல்தான்களைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையாகும்.

இஸ்லாம் சமயத் தோற்றம் கி.பி .6 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்றாலும் கிறித்து பிறப்பதற்கு முன்பிருந்தே அராபியர்கள் தமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர். சங்கத் தொகை நூற்களில் சோனகர் என்ற சொல்லால் குறிக்கபபடும் அராபியர் தம்நாட்டுக் குதிரைகளை இத் தென்னாட்டில் விற்றும் இந்நாட்டுப் பொருட்களை அங்கு கொண்டும் சென்றனர். சோனகர்க்குக் கைவந்த கலையான சரிகை வேலைப்பாட்டுக் கலை நம்நாட்டு மன்னர்களால் பெரிதும் போற்றப் பட்டது.

மாபர்

தமிழகம் அராபியர்களைச் சோனகர் என்ற சொல்லால் குறித்ததைப் போலவே இத்தமிழகத்தை அவர்கள் மாபர் என்ற சொல்லால் குறித்தனர்.

மாபர்' என்ற அரபுச் சொல்லுக்குப் 'பாலம் என்று பொருள், கொல்லம் முதல் நெல்லூர் வரை பரவிய நிலப் பரப்பு அரபு நாட்டு வணிகர்களால் மாபர் எனப்பட்டது. கடற்பயணம் செய்யும் அராபியர்கள், கொல்லத்தில் இறங்கித் தரை மார்க்கமாக சோழமண்டலக் கரையை அடைந்து பின்னர் அங்கிருந்து வங்காள விரிகுடாவில் கடற் பயணம் மேற் கொள்ளும் விதத்தில் இந்நிலப்பரப்பு அமைந்திருப்பதால் அவ்வாறு அழைத்தனர். டாக்டர் கே. கே. பிள்ளையவர்கள் சில முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் இதனை மாபர் என்று வழங்கினர் என்பர். ஆனால் கிரேக்க நாட்டு வழிச் செலவினனான மார்க்கோபோலோ என்பானும் இதனை மாபர் என்றே குறிப்பிடுகின்றான்.

பாண்டியர் வீழ்ச்சி

கி.பி. 1310இல் நிலையான ஆட்சியின்றி மாபர் வீழ்ச்சி யடைந்தது அப்போதைய மன்னன் மாறவர்மன் குலசேகர பாண்டி யனுக்குச் சுந்தர பாண்டியன், வீரபாண்டியன் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர். அவருள் சுந்தர பாண்டியன் பட்டத்தரசியின் மகன். வீரபாண்டியனே காமக்கிழத்தியின் மகன். வீரபாண்டியனே வீரமும் ஆண்மையும் மிக்கவனாக இருந்தான். தனக்குப் பின்னால் வீரபாண் டியனே நாட்டை ஆளவேண்டும் என்று கருதிய குலசேகரன் கி.பி 1295 ஆம் ஆண்டு அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான் தன் தந்தையின் செயலை வெறுத்த சுந்தரன் கி.பி. 1310 இல் தன் தந்தையைக் கொலைசெய்தான். சுந்தரன் தன் தந்தையைக் கொலை செய்த செய்தி எந்தக் கல்வெட்டிலும் காணப்படவில்லை என்றாலும் அமீர் குசுரு வசாப் முதலிய வரலாற்றாசிரியர்கள் எழுதி வைத் திருக்கும் குறிப்புகளால் இச்செய்தியினை அறிய முடிகிறது.[1]

1. Wassuf. Elliot & Dowsan. Part III P. 88

மாலிக்காபூர் படையெடுப்பு

குலசேகர பாண்டியன் கொலை செய்யப்பட்டதால் பாண்டிய நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. சுந்தர பாண்டியனுக்கும் வீர பாண்டியனுக்கும் இடையில் வாரிசுரிமைப் போர் மூண்டது. அப்போது தான் அலாவுதீன் கில்ஜியின் ஒப்பற்ற படைத் தலைவன் மாலிக் காபூர் தென்னாட்டிற்கு அனுப்பப் பட்டான்.

மாலிக்காபூரின் படையெடுப்பால் யாதவம், காகதீயம், ஒய்சளம், காம்பிலி ஆகிய நான்கு நாடுகளும் நிலை குலைந்தன.

மாபரின் வடக்கில் பெரும் படையுடன் வரும் மாலிக்காபூரை சுந்தர பாண்டியன் உதவிக் கழைத்தான்.[2] அவனுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு பாண்டிய நாட்டில் புகுந்த மாலிக்காபூர் பாண்டியர் இருவர்க்கும் உரிய 612 யானைகளையும் 20,000 குதிரைகளையும் 96.000 மணங்கு பொன்னையும் முத்தையும் அணிகலன்களையும் கொள்ளை யடித்துச் சென்றதாக ஜியாவுதீன் பருனி கூறுகின்றான்.[3]

மதுரையில் புகுந்த மாலிக்கபூர் ராமேஸ்வரம் வரை சென்றதாக டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் குறிப்பிடுகின்றார்.[4] ராமேஸ்வரத்தில் மசூதி ஒன்றைக் கட்டியதாக டாக்டர் கே.கே.பிள்ளை கூறுகின்றார். காபூர் மதுரையில் ஆளுநன் ஒருவனை நியமித்து விட்டுச் சென்றதாக கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு கூறுகின்றது. மாலிக்காபூரின் தென்னாட்டுப் படையெடுப்பை பற்றிய குறிப்புகளை கசாயினுல் புதூ, என்ற நூலிலும் காண முடிகிறது[5].

---

2. South Indian Inscriptioms. Vol. III. p. 247
3. Elliot & Dowson Vol. III p.204.
4. South India and Her Mohamaden Invadars p.101
5. Khasai-nul-Futtuh in Studies of Indo-Muslim History. By Hodiwala- Bombay, 19391, pp.251—9

மாபர் வெற்றி

கி.பி.1327 இல் முகம்மது பின் துக்ளக், தன் தலைநகரை டில்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றிய போது கொல்லம் முதல் நெல்லூர் வரை பரவிஇருந்த தமிழக(மாபர்) நிலப்பரப்பு இவன் ஆதிக்கத்தின் கீழ்இருந்ததாகத் தெரிகிறது என்றாலும்இவன் தென்னாட்டை எப்போது வென்றான் என்று சரியாகத் தெரியவில்லை. எய்யாபின் அகமத் என்னும் வரலாற்றாசிரியன் கி.பி.1322 இல் உள்ளுகான் என்னும்தளகர்த்தனைடில்லிசுல்தான்கியாசுதீன் துக்ளக் அனுப்பிவைத்தான் என்கிறான். இதற்கு ஆதாரமாகக் கர்னல் மக்கென்சி சேகரித்த ஏடுகள் இருக்கின்றன

......சாலிவாகன சகாப்தம் 1246க்குச் சரியான கொல்லம் அழிந்த ஆண்டு 227 ருத்ரோத்காரி வருடம் ஆனிமாதம் பராக்கிரமப் பாண்டியன் ஆண்டு வந்த நாளில் ஆதிசுல்தான் முல்க்கும், நேமி என்பானும் .... நாட்டைப்பிடித்துக் கொண்டனர்.

டில்லிசுல்தான் மதுரையைக் கைப்பற்றிய காலம் அந்நூலுள் இரண்டு விதமாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஒன்று சகாப்தம் 1246 ருத்ரோத்காரி வருடம் ஆனிமாதம் இது கி.பி. 1326 மே ஜூன் மாதம் ஆகும் இன்னொன்று கொல்லம் அழிந்தது முதல் கணக்கிடப்படும் வேறொரு அப்தம் ஆகும்.

இராங்கியத்தில் கிடைத்த புதுக்கோட்டை மாநிலக் கல்வெட்டு கி.பி. 1322 முதல் ஆதிசுல்தான் பாண்டிய நாட்டை ஆண்டு வருவதாகக் கூறுகின்றது கி.பி. 1323இல் டில்லிப் படையெடுப்பு பராக்கிரமப் பாண்டியன்மேல் நிகழ்ந்து, அவன் தோற்கடிக்கப் பட்டு டில்லிக்குக் கொண்டு செல்லப் பட்டதாகத் தெரிகிறது. கி.பி. 1326இல் உலபதிகான் என்னும் முஸ்லிம் சுல்தான் மாபரைப் பிடித்துக்கொண்டதாக மதுரைத் தலவரலாறு தெரிவிக்கின்றது. உலபதிகான என்னும் பெயர் உள்ளுகானைக் குறிக்கும் என்பார் டாக்டர் உசேனி உள்ளுகான் கியாசுதீன் துக்ளக்கின் படைத்தளபதி ஆவான். திருமயம் தாலுகாவிலுள்ள பனையூர் ஞானபரேஸ்வரர் ஆலயத்தில் தெற்கு நுழைவாயிலின் கிழக்குச் சுவரில் முகம்மது பின் துக்ளக்-கின் ९- ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் காணப் படுகின்றது இவற்றைத் தவிர கி.பி 1334 ஆம் ஆண்டு பொறித்த துக்ளக்கின் நாணயங்களும் தமிழகத்தில் கிடைக்கின்றன.

1. ஜலாலுடீன் அசன்ஷா கி.பி. 1335-38.

முகம்மது பின்-துக்ளக் மாபரில் தன் பெயரால் கி.பி. 1334இல் நாணயங்கள் வெளியிட்ட போதிலும் ஜலாலுடீன் அசன்ஷா என்ற பெயரில் அதே யாண்டு பொறிக்கப்பட்ட நாணயங்கள் சில கிடைக்கின்றன அரிய ஆய்வாளர்களான தேசிகாச்சாரி, ரெங்காச்சாரி என்போரால் புறக்கணிக்கப்பட்ட நாணயம் ஒன்றைத் தக்க தடை விடைகளால் விளக்கி டாக்டர் உசேனி என்பார் ஜலாலுடீன் அசன் தன்னை சுதந்திர சுல்தானாகப் பிரகடனப் படுத்திக் கொண்ட ஆண்டு அதுவே என நிறுவுகிறார்.6

ஆளுநன் ஜலாலுடீன்.

துக்ளக்கின் ஆதிக்கத்தில் இருந்த தமிழகத்தின் பரிபாலகனாக ஜலாலுடீன் அசன் நியமிக்கப்பட்டான். இசாமி என்னும் கவிஞன் ஜலாலுடீன் கொத்தவாலாக நியமிக்கப் பட்டதாகக் கூறுகின்றான். தனியரசு புரியக் கருதிய இவன் கிளர்ந்தெழுந்தான். படைத் தலைவர்களும் செயலர்களும் இவனுடைய கிளர்ச்சியால் கொல்லப் பட்டனர். கி.பி 1333 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் நாள் ஜலாலுடீன் அசன் 'ஷா' என்ற பட்டத்துடன் மணிமுடி சூடிக் கொண்டான்.

ஜலாலுடீன் அசன் கிளர்ந்தெழுந்து தன் பெயரால் நாணயங்களை வெளியிட்டபோது சுல்தான் முகம்மதுபின் துக்ளக் டில்லியிலிருந்து தெற்கு நோக்கி பீடார் வழியாக வாரங்கல்லை யடைந்தான். அங்கு அவனும் அவனுடைய படைவீரர்களும் கொள்ளை நோயால் பாதிக்கப் பட்டனர். அதனால் அவர்கள் முன்னேறுவதைக் கைவிட்டனர். மாபர் மீட்கப்படவில்லை.

சையது மரபு

எகியா பின் அகமத், பரிஷ்டா, பருனி முதலிய வரலாற்றா சிரியர்கள் ஷரீப் (ஆளுநன்) ஜலாலுடீன் அசன் என்னும் பெயரை 'சையத் அசன்' என்றே குறிக்கின்றனர்.

---

6. Journal of the Asiatic Society of Pakistan. Vol. II (1957 p. 93)

இவன் வெளியிட்ட ஹிஜிரி 738 (கி பி. 1336-37) ஆம் ஆண்டு பொறிக்கப்பட்ட நாணயத்தில் ஒருபுறம் அல்—உசைனி என்றும் மறுபுறம் அசன்ஷா என்றும் காணக்கிடைக்கிறது.

அல் உசைனி என்னும் சொல் முகம்மது நபிநாயகத்தின் பெயரர் இமாம்அல் - உசைன் என்பாரின் வழி வந்த சையது மரபினரைக் குறிக்கும். இந்த நாணயச் சான்றைக் கொண்டு இவனை சையது மரபினன் என்று துணியலாம். இபின பதூதா 9 இவனை 'சையத்' என்றும் எகியா பின் அகமத் 8 'பருனி' பரிஷ்டா முதலிய வரலாற்றாசிரியர்கள் இவனை 'சையத் அசன்' என்றும் அழைப்பது இக்காரணம் பற்றியே போலும்.

மேதகு உல்ட்ஸ் (Huldze) என்பார் ,இமாம் அல் உசைன் தீர்க்கதரிசி முகம்மது நபி நாயகத்தின் மகன் என தவறுபடக் குறிக்கிறார்.

இசுலாமியர்களின் புனித வேதநூலான 11 திருக்குர் ஆனில் தாஹா, யாசீன் என்ற பெயர்களால் முகம்மது நபி விளிக்கப் படுகிறார். 12 ஜலாலுடீன் அசன் தாஹாயாசீன் என்பன பொறித்த தங்க நாணயங்களை வெளியிட்டதாக இபின பதூதா கூறுகின்றான். ஆனால் இன்றளவும் அந்த நாணயங்கள் கிடைக்கவில்லை. இந் நாணயங்களும் இவன் தன் மரபை வலியுறுத்துவன எனலாம்.

பிற நாணயங்கள்

ஜலாலுடீன் அசன் ஷா கணக்கற்ற நாணயங்களை வெளியிட்டிருக்கிறான். அவைகள், செம்பும் பித்தளையும் கலந்த கலவை உலோகத்தாலானவை

ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் 'சுல்தான்களுக்கெல்லாம் சுல்தான்' என்றும் மறுபக்கம் நடுவில் அசன் ஷா என்றும், அதனைச் சுற்றிலும் ஓரத்தில் எண்ணால் ஹிஜிரியாண்டு 734 என்றும்பொறிக்கப் பட்டிருக்கிறது.

இன்னொரு நாணயத்தில் ஒரு புறம் பேராற்றல் படைத்த சுல்தான்' என்றும் மறுபுறம் 'அசன்ஷா' என்றும் காணப்படுகிறது

மற்றொரு நாணயத்தில் ஒரு புறம் 'ஜலாலுத்துனியாவுத்-தீன்' என்றும் மறுபுறம் அசன்ஷா 747 என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

ஆட்சிச் சிறப்பு :

இவன் ஆட்சியினைப் பற்றிக் கூறும் இபின்பதூதா இவனது அமைச்சியலில் இந்துக்களும் இடம் பெற்றிருந்தனர் என்கிறான். மேலும் முஸ்லிம் மன்னன் ஆள்வது போல் இல்லை என்றும் வியக்-கிறான். டில்லியின் எழில்மிகு மாடங்கள் மதுரையில் கட்டினான்.

இல்வாழ்க்கை

ஜலாலுடீன் அசன் மதுரைக்கு வருவதற்கு முன் டில்லியில் துக்ளக்கின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அமைச்சியல் அதிகாரியாக இருந்தான் இவனுக்கு இரு பெண் மக்களும் ஒரு ஆண் மகனும் இருந்தனர். பெண மக்களுள் மூத்தவளின் பெயர் ஹுர்நிசா. இவளை பாரசீக நாட்டு யாத்திரிகனான இபின் பதூதா மணந்திருந்தான். இரண்டாம் மகளை முகம்மது பின் துக்ளக்கின் படைத்தலைவன் மாலிக் - முஜீர் பின் அபிராஜாவின் குதிரைப் படைப் பிரிவில் இருந்த வீரன் சிராஜுதீன் என்பான் மணந்திருந்தான்.

ஜலாலுடீன் அசன்ஷா டில்லி சுல்தானால் அனுப்பப்பட்ட படையால் வெல்லப்பட்டதாக பருனி என்பானும், ஆளுநனாக வர விரும்பிய ஆட்சி அலுவலன் அலாவுதீன் உதௌஜியால் வெல்லப் பட்டதாக இபின பதூதாவும் கூறுவர். ஆகவே அலாவுடீன் உதௌஜி டில்லி சுல்தானின் படைத் துணையுடன் ஜலாலுடின் அசன்ஷாவைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான என்று கோடல் ஓராற்றான் பொருந்தும்.

ஆட்சிக் காலம்

ஜலாலுடீன் அசன்ஷா ஐந்தாண்டு காலம் ஆட்சி செய்ததாக பதூதா கூறுகின்றான் இவன் கி.பி. 1333 இல் அரியணை ஏறினான். இவனுக்குப் பின் வந்த அலாவுடீன் உதௌஜியின் நாணயம் கி.பி. 1339 ஆம் ஆண்டிற்குரியதாக இருப்பதால் ஜலாலுடீன் அசன்ஷா கி.பி. 1338 இல் வெல்லப்பட்டான் எனலாம்.

இவன் காலத்திய பாண்டியர்கள்

இவன் ஆட்சியின்போது இருந்த பாண்டிய மன்னர்கள்.

1. மாறவர்மன் குலசேகரன் (கி.பி. 1314 - 46)
2. சடையவர்மன் பராக்கிரமன் (கி.பி 1315 - 47)
3. மாறவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1334 - 80)
4. மாறவர்மன் பராக்கிராமன் (கி பி. 1335 - 52)

ஆகியோர் ஆவர்.

(தொடரும்)

கரந்தை தமிழ்ச் சங்க வரலாறு

இரா. சின்னத்தம்பி, M.O.L, M.Phil
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தமிழினத்தவரில் பலர். பல ஆண்டுகளாகவே தமிழ்ப்பல்கலைக் கழகம் ஒன்று நிறுவ வேண்டும் என்ற எண்ணங் கொண்டிருந்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தொடங்குவதற்குச் சட்டம் கொண்டு வந்த பிறகும், ஆந்திரப் பல்கலைக் கழகம் நிறுவ ஏற்பாடு செய்த பின்னரும் தங்களுடைய எண்ணம் நிறைவேறவில்லையே என்ற ஆத்திரத்தில் கிளர்ச்சி செய்யவும் ஏற்பாடு செய்தனர். திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த சான்றோர் பலர், தமது நகரில் அப்பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டுமென விரும்பினர்.

அப்போதைய அமைச்சர் திவான்பகதூர் தி.நெ. சிவஞானம் பிள்ளையவர்கள் தலைமையில் குரோதன ஆண்டு, ஆவணி மாதம் எட்டாம்நாள், கரந்தையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் சிலரும், தமிழ்ப் புலவர்கள் பலரும், தமிழ்ச் சான்றோர் சிலரும் அக்கூட்டத்தில் பங்கேற்றனர். ஆந்திரர்களின் பல்கலைக் கழக முயற்சியை எடுத்துக் கூறி, சென்னை சட்ட மன்றத்தில் இடம் பெற்றுள்ள தமிழ் இனத்தவர் தமிழ்ப்பல்கலைக் கழகம் நிறுவுதற்குரிய சட்டத்தை உடனடியாகக் கொண்டு வரவேண்டுமென்று சிலர் அக்கூட்டத்தில் உணர்ச்சியுடன் பேசினர். இராவ் பகதூர் டி.ஏ. இராமலிங்கச் செட்டியார் அலர்மேல்மங்கைத் தாயார் ஆகிய இருவரும் "நம் விருப்பப்படி சென்னைப் பல்கலைக் கழகத்தை மாற்றிக் கொள்ள முயல்வோம். அம்முயற்சி வெற்றி அளிக்கவில்லையென்றால், அதன் பிறகு தமிழுக்கென்று தனிப் பல்கலைக்கழக முயற்சியில் ஈடுபடுவோம்" என்றனர். ஆனால் அக்கூட்டத்தில் இருந்தோரைக் கைதூக்கல் மூலம் கணக்கிட்ட பொழுது இவ்விருவர் எண்ணத்திற்கு ஆதரவு மிகக் குறைவாகவே காணப்பட்டது. 'தமிழர்கட்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம்' உடனடியாகத் தேவை என்ற குரலே மேலோங்கி நின்றது.

கரந்தைப் புலவர் கல்லூரியின் தொடக்க விழாவின் போது சங்கத் தலைவர் உமாமகேசுவரனார், "இன்று நிலைநாட்டப் பெறும் புலவர் கல்லூரி, ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகமாக மாறும். அக்காலத்தில் நீங்கள் இருந்து அதனைக் காண்பீர்கள்.' என்று உணர்ச்சி ததும்பக் குறிப்பிட்டார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பதினான்காவது ஆண்டு விழா பண்டிதமணி அவர்களின் தலைமையில் குரோதன ஆண்டு ஐப்பசி மாதம் (24.10.1925) நடைபெற்றது அவர் தன் தலைமை உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார் 'புண்ணிய சீலர்களே! இனித் தமிழ் நிலத்தில் உறையும் தமிழ் இனத்தவராகிய நாம் அனைவரும் ஒன்று திரண்டுச் செய்ய வேண்டிய பெரும்பணி ஒன்று இருக்கிறது. அது தமிழுக்கென்று, தனிப் பல்கலைக் கழகம் அமைத்தலேயாகும்'' என்று கூறினார். பின்னர் அவ்வாண்டு விழாவின் இறுதியில் கீழ்க்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'தமிழ் மொழிக்கு ஒரு பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு சென்னை மாநில வளர்ச்சி நெறியமைச்சர் மாண்புமிகு. தி.நா சிவ ஞானம் பிள்ளையும் ஏனைய சான்றோரும் செய்து வரும் நன் முயற்சியைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பாராட்டி பெருமகிழ்ச்சி அடைகிறது இம்முயற்சி வெற்றி பெற தமிழ் இனத்தவர் ஒவ்வொருவரும் தம்மாலான உதவியினைச் செய்ய வேண்டுமென இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது'' இத்தீர்மானத்தை ஊ.சா. வேங்கடராமய்யர் முன்மொழிய வை. சதாசிவப் பண்டாரத்தார் வழிமொழிந்தார்.

இதன் பின்னர், தமிழ்ப் பொழில்களில் மூன்று தலையங்கங்கள் தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றி எழுதப்பட்டன. தமிழ் மொழியின் நலத்தைப் பாதுகாக்கும் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம், நிறுவினாலன்றி தமிழ் மொழியின் புறக்கணிப்பும் கலைத் தடையும் நீங்காது என்பதை உணர்ந்து கொண்ட உண்மையான தமிழர் பலர், தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவ ஏற்பாடு செய்து வருகின்றனர். (தமிழ்ப் பொழில் துணர் 1, மலர் 10) இம்முயற்சியின் அடிப்படையில் திருச்சிராப்பள்ளியில் 23.1.1926 இல் அமைச்சர் தி நா. சிவஞானம்பிள்ளை தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது

இதனை அடுத்து (தமிழ்ப் பொழிப் 3 துணர் 9 - 12இல்) சங்கத் தமிழ் அன்பர் சி. வேதாசலம் பி. ஏ. பி எல் அவர்களால் எழுதப் பெற்ற தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு :

"1923 ஆம் ஆண்டின் சென்னைப் பல்கலைக் கழகச் சட்டம் சென்னை சட்ட சபையில் ஆய்ந்து பேசப்படும் பொழுது ஓர் தனிப் பல்கலைக் கழகம் நிறுவுவதற்குச் சிதம்பரம் தகுதி வாய்ந்த இடமாக

ஒப்புக் கொள்ளப்பட்டது. இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவ ஏற்பாடு செய்வதால், தமிழ்ப்பல்கலைக் கழகம் தோற்றுவிக்கச் செய்த முயற்சி வீண் போய்விட்டதோ என்று அஞ்சும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சென்னை நகரிலுள்ள கல்லூரிகளை பட்டும் சென்னைப் பல்கலைக் கழகமாக ஆக்கி விட்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், ஆந்திர நாடும் போக சென்னை மாநிலத்தில் எஞ்சி நிற்கும் பகுதிகளில் உள்ள கல்லூரிகளைத் தமிழ்ப்பல்கலைக் கழகமாக ஏற்படுத்துவது, தமிழ்மக்கள் விரும்புதற்குரிய எண்ணமாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வாழ்க!

தமிழ்ப் பல்கலைக் கழகம் விரைவில் தோன்றி ஓங்குக!'' என்று புதிதாகத் தோன்றிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை வாழ்த்தியும் தோன்ற இருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை வரவேற்றும் தமிழ்ப்பொழிலில் (துணர்3 - மலர்12) தலையங்கம் தீட்டப்பெற்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவையில் (Senate கரத்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு இடம் அளிக்கப் பெற்றமைக்கு, தமிழ்ப் பொழிலில் நன்றி தெரிவிக்கப்பட்டது. (துணர்4 - பக்கம்51).

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர், தமிழவேள் உமாமகேசுவரனாரை தமிழ்ப் பேராசிரியராக வந்து பணியாற்றுமாறு விரும்பி அழைத்தனர். சங்கத் தலைவராக இருந்த தமிழவேள் சங்க வளர்ச்சியில் பேரன்பு கொண்டிருந்ததாலும், சங்கத்தைப் பல்கலைக் கழகமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாலும், அப்பேராசிரியர் பதவியினை ஏற்றாரில்லை.

தமிழ்ப் பல்கலைக் கழகம் என்று கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் உமாமகேசுவரனார் கூறியது, இன்றும் நீறு பூத்த நெருப்பாகவே இருந்து வருகிறது. தமிழகத்தில் உள்ள இரண்டு விவசாயக் கல்லூரிகளை இணைத்து விவசாயப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தியது போன்று, இருபதுக்கும் மேற்பட்ட தமிழ்க்கல்லூரிகளையும் இசை நாடகக் கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து தமிழ்ப் பல்கலைக் ககழமாக்குவது முறையான செயலாகவும் கருதப்படுகிறது.

2. சங்கமும் ஈழமும்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம், தமிழ்மொழிக்கு ஆற்றிவரும் தொண்டினைத் தமிழ்நாட்டவரேயன்றி ஈழத்துத் தமிழ்ப் பெரு- மக்களும் வியந்து பாராட்டினர் ஆகவே ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் சங்கத்தோடு தொடர்பு கொள்ள விருப்பங் கொண்டனர். சங்க வளர்ச்சியே தன் குறிக்கோளாகக் கொண்ட உமாமகேசுவரனார் ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்களையும். அவர்களின் தமிழ்ப் புலமை யினையும் சங்க வளர்ச்சிக்குப் பயன்படுத்த முயன்றார்

ஈழத்து அரசவை உறுப்பினரும், பரமேசுவரக்கல்லூரி முதல்- வரும் சர். பொன்னம்பலம் இராமனாதன் அவர்களின் மருமகனும் ஆகிய சு நடேசப்பிள்ளை, பி ஏ, பி.எல்., எம்.எல்.சி., கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் இருபத்தெட்டாவது ஆண்டுவிழாவிற்குத் தலைமை- தாங்கினார். (19, 20-8-39) தலைவரவர்கள் சங்கம் தமிழுக்குச் செய்து வரும் தொண்டினைப் பாராட்டி, ஈழத்துத் தமிழர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்பால் வைத்திருக்கும் மதிப்பினையும் அன்பினையும் தெரிவித்தார். 20 . 8 . 39ல் சு. நடேசப்பிள்ளை தலைமையில் விபுலானந்த அடிகள், கயிலைக் காட்சி என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிப் படம் வரைந்து காட்டி, கயிலையின் பெருமையினைக் கூறினார்.

இலங்கையில் குருமண்வெளி எனும் ஊரினைச் சார்ந்த அருள் செல்வநாயகம் என்னும் தமிழ்ப் பெருமகனார் 'முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை, தமிழ்ப் பொழிலில் வெளியிடப்பெற்றது.

ஆராய்ச்சி நூல் கற்கும் முறை இளங்கோ - இராமன் என்ற தலைப்புகளில் யாழ்ப்பாணத்து அறிஞர் த. இராமனாதப்பிள்ளை எழுதிய கட்டுரைகளும் தமிழ்ப்பொழில் வாயிலாக வெளிவந்தன

இலங்கை பரமேசுவரக் கல்லூரியில் பணியாற்றிய சு. ந. கி. பாரதி அவர்கள் 'கலைமாச்செல்வி' என்ற தலைப்பிலும், பேராசிரியர் கா.பொ.இரத்தினம் 'எழுத்தும் பேச்சும்' என்ற தலைப்பிலும் எழுதிய கட்டுரைகளும், இலங்கை அ.கோபாலையன், மு.இராகவையங்- காருக்கு எழுதிய மறுப்புக் கட்டுரையும் தமிழ்ப்பொழில் வாயிலாக மக்கள் படித்து உணர்ந்தனர்.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் சங்கத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டுவிழாவிற்குத் தலைமை ஏற்றார். அவருடைய யாழ் நூலின் பெரும்பகுதிக் கட்டுரைகள் தமிழ்ப்பொழிலில் வெளியிடப் பெற்றதும் சங்கத்தின் சார்பில் திருக்கொள்ளம்புதூரில் யாழ்நூல் அரங்கேற்றம் நடைபெற்றதும். சங்கத்தின்பால் அவர் வைத்திருந்த அன்பையும் மதிப்பையும் காட்டுவனவாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் கந்தசாமிப்புலவர் இயற்கையெய்தியபொழுது. விபுலானந்தர் கங்கைக் கரையில் இராமகிருட்டிண மடத்தில் தங்கியிருந்தார். இத்துன்பச் செய்தியைக்கேட்ட விபுலானந்தர், 'கங்கையில் எழுதி-விட்ட ஓலை' என்ற தலைப்பில் கையறு நிலை எழுதித் தமிழ்ப் பொழிலுக்கு அனுப்பி வைத்தார். இமயமலைச்சாரலில் தங்கியிருந்த பொழுதும் தமிழ்ப்பொழிலுக்குக் கட்டுரைகள் எழுதிக்கொண்டுதான் இருந்தார்.

இவ்வாறு, முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் கங்கைக் கரையில் தங்கியிருந்தபோதும், பனி பொழியும் இமயமலைச் சாரலில் உறைந்தபோதும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை மறவாத உயர்ந்த பண்பாளராக விளங்கினார்.

கட்டாய இந்தியும் கரந்தை தமிழ்ச்சங்கமும்

இந்தியப் பெருநாட்டின் பெருமைக்குரிய தலைவர்கள், இந்நாடு சிதறுண்டு போகாமல் ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் அனைத்திந்தியாவிற்கும் ஒரே மொழி இருக்க வேண்டுமென எண்ணினர் இவ்வடிப் படையில் நாட்டின் ஒருமைப்-பாட்டையும் வலுவடையச் செய்ய விரும்பினர். ஆனால் சில மொழிவெறியர்கள், இவற்றைத் தங்கள் சுயநலத்திற்குப் பயன்-படுத்தத் தொடங்கினார் இப்போக்கினை உணர்ந்து கொண்ட தமிழ்ப் பெரியார்களும், தமிழ்ச் சான்றோர்களும் இந்தி மொழித் திணிப்பை எதிர்த்துப் போரிடத் தலைப்பட்டனர்.

இப்போராட்டத்தில் கரந்தைத் தமிழ்ச் சங்கம், குறிப்பிடத் தக்க அளவில் செயலாற்றியது. தமிழவேள் உமாமகேசுவரனார் இன்மொழியே பேசிப் பழக்கப்பட்டவர். யாரிடமும் எப்பொழுதும் வன்மொழி பேசி அறியாதவர். 1937 ஆம் ஆண்டில் தமிழகத்தில்

இந்தி கட்டாய பாடமாக்கப்பட்டபோது, அவருடைய உள்ளம் எரிமலையாக மாறியது. கடல் பொங்கி எழுந்தது போல் உணர்ச்சி வயப்பட்டார் 'எங்கிருந்தோ வந்த இந்திக்குத் தமிழ்நாட்டில் என்ன வேலை'' என்று உரத்த குரல் எழுப்பினார்.

அப்பொழுது சென்னையில் பெரியார் தலைமையில் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்று நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பெறறன பெரியார் முன்கூட்டியே சிறை செய்யப் பட்டதால், பெரியாரின் உருவப் படத்தைத் தலைமை இடத்தில் இருத்திப் பின்னர் சர். ஏ டி பன்னீர்ச்செல்வம் அம் மாநாட்டிற்குத் தலைமை ஏற்றார் அந்த மாநாட்டில் பங்கு பெறும் பொருட்டு தஞ்ச வூரிலிருந்து இந்தி எதிர்ப்புப் படையொன்று ஐ. குமாரசாமிப்பிள்ளை முன்னிலையிலும், பட்டுக்கோட்டை அஞ்சா நெஞ்சன் அழகிரி சாமி தலைமையிலும் சென்னை நோக்கிச் சென்றது சங்கத் தலைவர் உமாமகேசுவரனார் அப்படை வீரர்களுக்குத் தன்னாலான உதவிகளை எல்லாம் செய்து உற்சாக மூட்டி அனுப்பினார்.

கரந்தைப் புலவர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய திரு க வெள்ளைவாரணனார், கட்டாய இந்தியை எதிர்த்து. ''வெண்கோழி விடு தூது'' என்னும் தலைப்பில் எழுதிய உணர்ச்சிமிக்கதொரு கவிதைநூலும் இக்காலத்தே தான் வெளிவந்தது.

தமிழவேள் இந்தி மொழி கட்டாய பாடமாக்கப் படுவதைக் கடுமையாக எதிர்த்தவர். ஆனால் தமிழர்கள் பல்வேறு மொழிகளைக் கற்று. பல கலைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்றும் விரும்பியவர் அவர் தஞ்சை வட்டக் கழகத் தலைவராக இருந்த பொழுது. திருப்பூந் துருத்தி உயர் தொடக்கப் பள்ளியில் அராபிய மொழி வளர்ச்சிக்கு ஆதரவளித்தது இதற்குச் சான்றாகும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் இளங்கோவடிகள் கழக இருபத்தைந்தாவது ஆண்டு விழாவில் (1963) பேசிய பேரறிஞர் அண்ணாத்துரை, கரந்தைத் தமிழ்ச் சங்கம் கட்டாய இந்தியை எதிர்த்துப் போரிட்டதைப் பாராட்டிப் பேசினார். இவ்வாறு, கரந்தைத் தமிழ்ச் சங்கம் கட்டாய இந்தியை எதிர்த்துத் தன்னுரிமையை நிலை நாட்டியிருக்கிறது

(தொடரும்)

இலக்கியத்தில் இமயமலை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கு. சதாசிவன், M.A., M. Phil.
மதுரைப் பல்கலைக் கழகம்

தமிழரின் வடநாட்டுப் படையெடுப்பு ஒரு வரலாற்று நிகழ்ச்சியே என்பதனை மேலும் சில ஆதாரங்களைக் கொண்டு விளக்குவோம். இப்படையெடுப்புகளை ஒரு புறப்பாடல், சீன வரலாற்றுக் குறிப்புகள், மகாபாரதச் செய்திகள் கலிங்கத்துப் பரணியின் வரலாற்றுச் சான்றுகள் நிலவியல் ஆராய்ச்சி விளக்கங்களைக் கொண்டு ஆய்வோம். இவை அனைத்தும் முன் நிறுவப்பட்ட கருத்தினை அணி செய்வதாய் அமைகின்றன. இவற்றில் சில முற்கால வரலாற்றாய்வாளருக்கு எட்டாத நிலையில் இருந்தன. இன்று அவை ஆழச் சிந்திக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளன. இக்கருத்தமைதிகளை ஒப்புக் கொள்வதும், ஒதுக்கி வைப்பதும் ஆய்வாளரின் தன்மையைப் பொறுத்தே அமையும். ஆனால் இவற்றில் பொதிந்து கிடக்கும் உண்மைகளை மறுப்பதற்கில்லை. மேலும் தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ளின் இன்னும் அவை விளக்கம் பெறும். இருண்டு கிடக்கும் தமிழக வரலாற்றுப் பகுதியும் ஒளி பெறும்.

இமயம் வரைப் படையெடுத்துச் சென்று வெற்றிக்கொடி நாட்டிய மும்முடி மன்னர்களில் சேரரும் இருந்தனர். சேரரின் இமயப் படையெடுப்பு சோழன் நலங்கிள்ளி,[1] சேரருக்குரிய கருவூரைக் கைப்பற்றுதற்கு முன் நிகழ்ந்திருக்க வேண்டும். சோழன் நலங்கிள்ளியின் மகன் சோழன் கிள்ளி வளவன். இவனுக்குச் சமகாலச் சேரன், செங்குட்டுவன் ஆவான். கிள்ளி வளவனுக்குத் தம் அரியணையை மீட்டுத் தந்தவனும் இச் சேரனே. இச்சேரனும் வடநாட்டின் மீது படையெடுத்தனன். இப் படையெடுப்பு செங்குட்டுவனின் இறுதிக் காலத்தில், அதாவது நலங்கிள்ளி இறந்தபின், நிகழ்ந்திருக்கவேண்டும். எனவே சோழன் நலங்கிள்ளி சேரன் செங்குட்டுவனுக்கு காலத்தால் சற்று மூத்தோன் என்றே தோன்றுகிறது. நலங்கிள்ளி அரசோச்சிய

1 39-ஆம் புறப்பாடலின் அணியுரை இவனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்கின்றது. புறப்பாடல் 7, 6-உம் பார்க்க.

காலத்து. இச்சேரன் இளவலாக இருந்திருக்கலாம். ஆகவே, இச் சோழன், சேரன் செங்குட்டுவனுக்கு முன் சேர நாடாண்ட மன்னனின் ஆட்சிக்காலத்துத்தான் கருவூரை முற்றுகையிட்டிருக்க வேண்டும். அம்முற்றுகையின் முடிவில் சோழன் நலங்கிள்ளி பெற்ற வெற்றியின் சிறப்பினை மாறோக்கத்து நப்பசலையார் என்ற சங்கப் புலவர் புகழ்ந்து கூறுவாராயினார். இப் புலவரின் நோக்கு இச் சோழனைப் புகழ்வதேயாம். அப்படிச் செய்யுமிடத்து சேரரின் முன்னாளையப் பெரு வெற்றிகளைச் சுட்டுவாராயினார். அவர் சுட்டும் சேரரின் பெருவெற்றி யாதென்னின் அது அவர்களின் இமயப் படையெடுப்பேயாம். அப்படிப்பட்ட பெரு வெற்றி வீரர்களாகியச் சேரரை வெற்றி கொண்ட மாவீரனே இச் சோழன் என்று புகழ்ந்து பாடுகிறார் அவர் பாடிய புறப்பாடல் :

"......................... .... ஓங்கிய
வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட்டு
இமயஞ் சூட்டிய ஏமவிற் பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி வாட்டு நின்
பீடுகெழு நோன்றாள் பாடுங்காலே" (புறம் : 39-13-18)

"உயர்ந்த எல்லை அளந்தறியப்படாத பொன்படுகின்ற நெடிய சிகரங்களையுடைய இமயமலையின்கட் சூட்டப்பட்ட காவலாகிய விற்பொறியையும், மாட்சிமைப் பட்ட தொழில் பொருந்திய நெடிய தேரையுமுடைய சேரன் அழிய, அவனது அழிவில்லாத கருவூரை அழிக்கும் நினது பெருமை பொருந்திய வலிய தாளைப் பாடுங்காலத்து" என்பதே இதன் பொருள்.

சேரர் இச்சோழனுக்கு முன் வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்று பெற்ற வெற்றியின் சின்னமாகத் தம் விற்பொறியை அம்மலைக்கண் பொறித்து மீண்டனர் என்பது இப்பாடலால் அறியப்படுகிறது. இச்சேரப்படையெடுப்பு சேரன் செங்குட்டுவனின் வடநாட்டுப் படையெடுப்புக்கு முந்தியது என்பதும் வெளிப்படை. இச்சேரனைப் புகழுமிடத்து புலவர் புகழ்ந்துரைத்த சேரன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனாக இருக்கலாம் என்பது கவனிக்கத்தக்கது. இமயவரம்பனுக்குப் பின் அவன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனும், மகன் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலும் சேர நாடாண்டனர். பெரும்பாலும் நார்முடிச் சேரனுக்குச் சமகாலத்தவனாகவே இச் சோழன் இருக்க வேண்டும்.

சிலப்பதிகாரம், அகநானூறு போன்ற சங்க இலக்கியங்களில் கூறப்படும் தமிழரின வடநாட்டுப் படையெடுப்புக்குப் போதிய சான்றுகள், துணைச் சான்றுகளாயினும் இல்லையே என்ற குறைபாட்டை இப்புறப்பாடல் தீர்த்து வைக்கிறது. ஆகவே மாறோகத்து நப்பசலையாரின் இப்பாடல் வரலாற்று நயம் கொண்டது என்பது மறுக்கமுடியாத உண்மை.

இனி நாம் சீன நாட்டு வரலாற்றுச் சான்றுகளை ஆய்வோம். பழங்காலத் தமிழகத்துக்கும் புராதனச் சீனாவுக்குமிடையே நல்லுறவு இருந்து வந்துள்ளது. இவ்விணக்கம் வர்த்தக, அரசியல் தொடர்புகளால் பன்மடங்காய் வளர்ந்து வந்துள்ளது. தமிழகத்துக்கே உரிய பாணியில் எழுந்த இசை, இலக்கணம், வானியல், தத்துவம் ஆகியவை பற்றிய தொடக்க அறிவினைத் தமிழகம் சீனாவிடமிருந்து இவ் உறவுகள் மூலம் பெற்றிருக்கலாம் என்று கனகசபைப் பிள்ளை கருதுகிறார்கள். இவற்றைத் தமிழகம் வங்கம் பர்மா வழி பெற்றிருக்கலாம் என்றும் கருதுகிறார்கள். ஏனெனில் வங்கம், பர்மா ஆகிய இருநாடுகட்கும் பண்டைத் தமிழகத்துக்குமிடையே நெருங்கிய, நீண்ட நேரடியான தொடர்பு இருந்து வந்துள்ளது என்றும் அவர் கருதுகிறார்[2]

தமிழர் சீனாவிடமிருந்துதான் அனைத்து தொடக்கால நுண் அறிவுகளையும் பெற்றனர் என்பது ஐயத்திற்குரியது. ஆனால் பட்டு நெய்யும் நுண்கலையை நாம் சீனாவிடமிருந்து கற்றுக் கொண்டோம் என்பது உண்மை. இவ்வறிவினை நாம் வங்கம், பர்மா மூலம் பெற்றோம் என்பதும் உண்மை. சில அறிவுக் கருத்துக்கள் பல நாடுகளில் ஒரே வேளையில் எழுவதும், மற்றும்சில கருத்துக்கள் ஒரு நாட்டிலிருந்து பிறநாடுகளுக்குச் செல்வதும் இயற்கை. அதற்காக ஒரு நாட்டுமக்கள் அனைத்தையும் பிற நாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்தனர் என்றால் அது வரலாற்றுண்மையல்ல.

இவ்விதத் தொடர்பு சீனாவுடன் இருந்தமைக்குச்சில வரலாற்றுச்சான்றுகள் இருப்பதாய் அறிகிறோம். அவை முத்தமிழ்நாட்டு மும்முடி மன்னர்களைப் பற்றியதாம். சீன வரலாற்றில் சேரர் 'பூஹி' (பூழியர்)

---

2. V. Kanakasabhai Pillai, the Tamils 1800 years Ago, (Kaghakam, 1966), p. 52

என்றும், சோழர் 'ஷோஹாஷென்னி' என்றும், பாண்டியர் 'ஹாண்டி' என்றும் குறிக்கப் பட்டுள்ளதாகப் பண்டிதர் ரா.இராகவையங்கார் கூறுகிறார். அவர் கூற்றாவது, "இனிச் சீன தேசச் சரித்திரத்து, தமிழ் மூவேந்தரோடு பலவகையினுமொத்த ஆதி மூன்றரசர்கள் கூறப்படுகின்றனர் அவருள் முதல்வன் பூஹி (Fuhi) (பூமியன்) என்பான் என்றும் அவன் தன் வில்வலியால் வேட்டமாடி உயிர் வாழ்ந்து தன் நாட்டார்க்குத் தலைமையெய்தினானென்றும். அதன் பின் ஷோஹாஷெனி (சோழன்) உண்டானான் என்றும், அவன் நீர் நிலை கண்டு நிலங்களைத் திருத்திப் பயிர்களை வளர்த்துத் தன் நாட்டை வளம் படுத்தினவன் என்றும் தன் நாட்டார் நீடு வாழ்வதை விரும்பி மருந்து முறைகளை மேம்படுத்தினானென்றும், இதன் பின் ஹாண்டி (பாண்டியன்) உண்டாயினனென்றும், அவன் தேர் முதலியவை ஆக்கினன் என்றும், அரண் பல வகுத்தனன் என்றும், உலக வரலாறறிந்த பலவறிஞரைத் திரட்டி நூலாராய்ச்சி செய்தனன் என்றும், இசையளவு கண்டானென்றும் கூறப்படு கின்றன"[3]

மேலும் அவர், "இங்குக் கூறியுள்ளன தமிழ் மூவேந்தர் வரலாற்றுக்குப் பெரும்பாலும் ஒத்தலால் இக்கதை தென்னாட்டி னின்று இமயத்துக்கு அப்பாற் புகுந்ததோவென்று ஐயுறுதற்கு இடந்தருகின்றது. இதன்கண் ஹாண்டி என்பது பாண்டியன் என்பதன் மரூஉ என்பது எளிதில் உணரத்தகும். பாண்டியன் நாடு பாண்டிநாடு என வருதல் அறிக. தமிழில் பள்ளி என்பது கன்னடத்தில் ஹள்ளி என்பதுபோல பாண்டி ஹாண்டியாயிற்று என நினைக்கத்தகும். ஷோஆங் என்பது சோழன் என்னுஞ் சொல்லை அவர்கள் ஒலித்த முறையாகும் பூஹி என்பது பூழியன் என்னுஞ் சேரன் பெயராகும்".[4]

இப்படிக் கூறுமிடத்து இப்பண்டிதர் ஒரு பெரும் தவறைப் புரிந்து விட்டார். அஃதாவது இவ் வரலாற்றுச் செய்தியை எந்த நூலிலிருந்து பெற்றார் என்பதைச் சுட்டவில்லை என்பதாம். ஆனால் தேவைப்பட்டால் வேற்றிடத்தில் விளக்கிக் கூறுவாம் என்று கூறி முடித்துவிட்டார்.

---

3. R. Raghavaiyangar, Tamil Varalaru, (Annamalai University, 1979), p.63

4. I bid., p. 64 i

இச் செய்தியை நாம் உண்மை என்று கொண்டால், இது யாரால், எவ்வழியே சீனாவுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கும் என்ற வினா எழும். இது வணிகர் மூலம் சென்றதா? அரசியல் தூதுவர் மூலம் சென்றதா? சீனாவின் அண்டையில் வாழ்ந்த தமிழரால் எடுத்துச் செலலப்பட்டதா? சீன நாட்டிலிருந்து தமிழகம் வந்து போனவர்களால் கொண்டு செல்லப்பட்டதா? என்ற வினாக்களும் எழும். பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரின் கருத்துப்படி நோக்கின் இது பெரும்பாலும் வியாபாரிகளால் எடுத்து செல்லப்பட்டிருக்கும் என்பதாம். அவர் கூற்றுப்படி மேனாட்டு, கீழ் நாட்டு வர்த்தகத்தில் அராபியரும், தமிழரும் மலேயரும் நடுவர்களாகவே இருந்துள்ளனர் என்பதாம்[5]. நடுவர்களாக இருப்போர் மேல்நாடுகளுக்கும், கீழ்நாடு-களுக்கும் செல்ல வேண்டும் என்ற கண்டிப்பு இல்லை. அவர்கள் போகவே இல்லை என்றும் கூறுவதற்கு இயன்றிலது. ஆனால் இமயமலை அடிவாரத்தில் மலைகளுக்குத் தமிழ்ப் பெயர்கள் இருந்து வருவதை நோக்குமிடத்து, இது தரை வழி சென்றதாகக் கொள்வதே பொருந்துமாற் தோன்றுகிறது.

சிக்கிம், பூட்டான் போன்ற மலைப் பகுதிகள் இமயமலையின் கண் உள்ளன தமிழர் சென்று வென்ற மலை நாடுகள் இவற்றினிடைப் பட்ட பகுதிகளாதல் வேண்டும். இப்பகுதியிற்றான் வங்கத்துள்ள டார்ஜீலிங்கிலிருந்து திபெத்துக்கு செல்லும் கணவாய்கள் உள்ளன. இக்கணவாய்களில சில வியாபாரிகளை திபெத்திலுள்ள சும்பி பள்ளத்-தாக்குக் கொண்டு சென்றிருக்க வேண்டும். இச் சும்பிப் பள்ளத்-தாக்கு வழி திபெத்துக்குச் சென்ற வர்த்தகரோ, தூதுவரோ, அறிஞரோ தமிழரைப் பற்றிய இச் சிறப்புச் செய்தியைச் சீனாவுக்கு எடுத்துச் சென்-றிருக்க வேண்டும். எக்காரணத்தாலோ இத்தொடர்பு நீண்ட காலம் நிலைத்திராமல் போயிற்று. இது ஒரு வேளை வட கீழ்ப்பகுதிகளில் எழுந்த குப்தர்களால் தடைப் பட்டிருக்கலாம்.

பல நூற்றாண்டுகளாகத் தொடர்பற்றிருந்த நிலை மாறி, மீண்டும் தமிழகத்துக்கும் சீனாவுக்குமிடையே அரசியல் தொடர்பு

---

5. K.A.N. Sastri, the Colas, (University of Madras, 1975), p. 219.

புதுப்பிக்கப்பட்டது. இத்தொடர்பு அரசியல், வாணிபத் தொடர் புடையது. இவற்றைச் சோழர் தம் தூதுவரை அனுப்பிப் புதுப்பித்துக் கொண்டனர். சீனாவிலும் அதற்கு ஏற்ற அரசியல் சூழ்நிலையும் ஏற்பட்டிருந்தது. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில், அதுகாறும் உறங்கிக்கிடந்த சீனா வெளிநாட்டு வணிகத்தின் மதிப்பை உணர்ந்தது. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீனாவின் உள் நாட்டுப் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டதே இந்த வர்த்தகத் தொடர்பு. புத்துயிர்ப் பெற்றெழுந்த சீனா தம் வெளி நாட்டு வணிகத் தொடர்பினைப் பெருக்கிக் கொள்ளத் துணிந்தது. பத்தாம் நூற்றாண்டினிறுதியில் வெளிநாட்டு வியாபாரிகள் சீனாவில் வியாபாரம் மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. இதனைத் தீவிரப்படுத்த சீனப் பேரரசர் பொன்னும் பொருளும் கொடுத்து ஒரு தூதுக் குழுவைப் பிற நாடுகளுக்கு அனுப்பினார். இச் செய்திகளை சா-ஜு-குவா[6] (Chau-Ju-Kua) என்ற சீனப் பயணி விட்டுச் சென்ற குறிப்புகள் சுட்டுகின்றன.

சீனாவில் ஏற்பட்ட சுமுகமான அரசியல் மாற்றத்தின் விளைவே சோழரின் சீனத் தூதுக்குழுக்கள். முதலாம் இராசராசனின் இறுதியாண்டில் சோழ நாட்டிலிருந்து புறப்பட்ட முதல் தூதுக்குழு ஏறக்குறைய கி.பி. 1015-ஆம் ஆண்டு சீனா சென்று சேர்ந்ததாயும், இரண்டாவது சோழத் தூதுக்குழு இராசேந்திரனின் ஆட்சியின் போது புறப்பட்டு கி.பி. 1033-இல் சீனா சென்று சேர்ந்ததாயும், மூன்றாம் சோழத் தூதுக்குழு முதலாம் குலோத்துங்கனின் ஆட்சியின் போது புறப்பட்டு கி.பி. 1077-இல் சீனா சென்று சேர்ந்ததாயும் சா.ஜு குவா என்ற சீன அறிஞர் வரைந்த சூ-பன்-சி[7] என்ற நூலின் அடிப்படையில் பேராசிரியர் சாஸ்திரியார் கூறுகிறார்.

சோழப் பேரரசர்களின் இம் முயற்சி தமிழக வரலாற்றுக்குப் புதுமையானதன்று. அவர்களால், பழங்காலத்து நிகழ்ந்து, இடையில் தடைபட்டுக் கிடந்த சீன நாட்டு உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

6. Hirth and Rockhill Chau-Ju-Kua, pp. 18-19. Also refer to Prof. Sastri, The Colas, p. 219. Chau-Ju-Kua's account is Chu-fan-ci'.

7. Ibid., p. 100. See also the Colas, p. 219.

இதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே மும்முடி மன்னர்களைப் பற்றிய சிறப்புச் செய்திகள் சீன நாட்டுக்கு எட்டியிருந்திருக்கின்றன.

மேற்கூறிய வரலாற்றுச் சான்றுகளைச் சற்று நுணுகி ஆராயின் பண்டைத் தமிழகத்துக்கும் சீனாவுக்கும் இடையே ஒருவித நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது என்பது புலனாகும். மும்முடி மன்னர்களைப் பற்றிய சீன நாட்டு வரலாற்றுக் குறிப்புகள் முத்தமிழ்க் காவலரின் வட நாட்டுப் படையெடுப்புக்கு மறை முகச் சான்றாய்த் தோன்றுகின்றன தமிழரின் இச் செயல் வரலாற்றுண்மைக் குப்புறம்பானது அல்ல என்பதும் இதனால் பெறப்படும். இச் சிறப்புச் செய்திகள் சென்ற வழிகளை நோக்குமிடத்து, இவை பெரும்பாலும் தமிழரின் படையெடுப்புக்குப்பின் நிகழ்ந்தவையே என்பதும், இவை படையெடுப்புக்குப்பின் வடகீழ்ப்பகுதிகளில், குறிப்பாக மணிபுரம் போன்ற பகுதிகளில், உறைந்த தமிழரின் சீனத் தொடர்பு மூலம் ஏற்பட்டதே என்பதும். இச் செய்திகள் கடல் வழி செல்லாது. தரை வழி, அதாவது சும்பிப் பள்ளத்தாக்கு வழி திபெத்துக்குச் சென்று. அங்கிருந்து சீனாவுக்குச் சென்றிருக்க வேண்டும் என்பதும் ஆராயின் விளங்கும் வங்கக் கடலிலும், உள்நாடுகளிலும் தமிழர் வணிகம் மேற்கொண்டிருந்தனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. கூக்ளி நதியினுள் தமிழ் நாவாய்களை ஓட்டிச் சென்று தமிழக வணிகர்ப் பெருமக்கள் நதிப்புறத்து மக்களுடன் வாணிபம் மேற்கொண்ட செய்தியைத் தமிழ் இலக்கியங்களிலும், மேநாட்டார்க் குறிப்புகளிலும் பரக்கக் காணலாம். இவ் வியாபாரப் பெருக்கத்துக்குத் தமிழ் நாடுவிட்டு இந்தியாவின் வடகீழ்ப் பகுதிகளில் குடி புகுந்த தமிழர் பெருங்காரணமாயிருந்திருக்கலாம்.

மேற்கூறிய கருத்துக்குத் துணை நிற்பது மணிப்பூர் என்ற பெயர் வழக்கு ஆகும் இது உண்மையில் ஒரு தமிழ்ப் பெயரா? என்பது ஆராயத்தக்கது. தென்னகத்தின் மகாபாரத வழக்குகளில் மணலூர்புரம் என்ற ஊர்ப் பெயர் வருவதைக் காணலாம். இவ்வூர் பாண்டியனின் முன்னாளைய, அதாவது, மதுரைக்கு முன்பிருந்த, தலைநகர் என்று வருவதையும் காணலாம். அருச்சுனன் மணலூர் நகர்ப் புகுந்து சித்திராங்கதையை மணந்தான் என்று மகாபாரதத்துக் குறிக்கப்பட்டுள்ளது. இப் பெண்மணியின் தந்தை மலையத-துவஜன் என்றும், அவன் பாண்டிய மன்னன் என்றும் அறியப்படுகிறது மற்றொரு பிரதியில் அருச்சுனன் கலிங்கத்தைவிட்டு மணிப்பூரை அடைந்தான் என்றும், அந்நாட்டு மன்னன் சித்திர-

வாகனனின் மகளாம் சித்திராங்கதையைத் திருமணம் புரிந்தான் என்றும் காணப்படுகிறது. மகாபாரதத்தின் ஆதிபர்வ தெலுங்கு மொழி பெயர்ப்பில் மணிப்பூர் காவிரியின் தென் பகுதியில் உள்ளது என்றும் வருகிறது.[18] மேலும் கலிங்கத்துப்பரணியில்[19] குறிக்கப்பட்டுள்ள இடங்களில் மணலூரும் ஒன்று என்பதும், இது தென் தமிழகத்திலுள்ள இடமாய்த் தோன்றுகிறது என்பதும் கருத்தக்கது மேலும் இப்பெயர் கொண்ட ஊர் இன்றும் குமரி மாவட்டத்தில் இருந்துவருவது சிறப்புக்குரியது ஆகும்.

மகாபாரதக் கதையில் வரும் மேற்கூறிய செய்திகள் அனைத்தும் பிற்கால இடைச் செருகல்கள் என்று பிள்ளை அவர்கள் தள்ளிவிட்டனர். ஆனால் இன்று இம்மணிப்பூர் என்ற வடநாட்டு ஊர்ப் பெயர் மணலூர் என்ற தமிழ்ப்பகுதி வழி பிறந்ததே என்று கருதப்படுகிறது. மணலூர் வழி பிறந்ததே மதுராபுரி என்றும் பின் தோன்றியதே மணிப்பூர் என்றும் திருவிளையாடற் புராணம் கூறுவதாய் பண்டிதர் மு. இராகவையங்கார் கூறுகிறார்கள். அவர் கூற்றாவது ' இனி தென்னாட்டுப் பாரதப்பிரதிகளிற் கண்ட மணலூர்புரமென்பது, மதுரை யுண்டாவதற்கு முன்பே பாண்டியன் தலைநகராயிருந்ததென்பதை திருவிளையாடற்புராணம் படித்தவரெல்லாம் அறிவர். இதனை, மணவூர், மணலூர், மணற்புரம்என்றுமதுரை மான்மியங்கள் வழங்கும் இவ்வூர் மதுரைக்குக் கிழக்கேயுள்ளது. வடநாட்டார் வழங்கும் மணிபுரம் என்பதை மணலூர் புராமன்பதன் திரிபாகவேனும், ''அயிலிலங்கு மணற்புரத்தரசற் குவந்தறி வித்தனன்'' என வேப்பத்தூர் திருவிளையாடற் புராணத்திற் (படலம் ருங; பாட்டு-க.) கண்டவாறு மணற்புரமென்பதன் திரிபாகவேனும் கொள்ளுதலே முன்பு கூறிப்

---

8. V. Kanakasabai pillai, Op. cit., p. 54 f.n.

9 க.ப. அறவாணன், கலிங்கத்துப்பரணி ஒரு மதிப்பீடு, ஜைன இளைஞர் மன்றம் சென்னை, 1976)

10 சங்கத் தமிழ் இலக்கியங்களிலும் வடநாட்டிலக்கியங்களிலுமுள்ள பல ஊர்ப் பெயர்களைத்தாங்கிய ஊர்கள் குமரிமாவட்டத்தில் இன்றும் இருந்து வருவது ஆராயத்தக்கது ஆகும். (உ,ம்) அதங்கோடு, காப்பியக்காடு, குறிம்பனை, தேங்காய்ப் பட்டணம் (தெங்கநாடு). மணலூர், முன்சிறை, மானகன்றுவிளை, பறளிஆறு.

போந்த நியாயங்களோடு பொருந்துமென்க. வியாஸபாரதம் ஆதிபர்வம் தெலுங்கு மொழி பெயர்ப்பில் மணிபுரமென்றே காணப்படுவதாயினும், அந்நகரம் காவிரிக்குத் தெற்கேயிருப்பதாக அம்மொழி பெயர்ப்பில் காண்டலால், மணலூர்புரம் அல்லது மணற்புரமென்பதன் திரிபே மணிபுரமென்பது வலியுறுகின்றது. இம் மணலூர்புரமென்னும் பாரத வழக்கு இக்காலத்தவர் சேர்த்ததன்றென்பது, மணலூர்புரமென்னுந் தமிழ், வியாசபாரதத்திற் சென்றது தேசிகம்'' எனப்பிரயோக விவேக நூலார் கூறிச் செல்லுதலாலும் (காரகப்-உ.) அறியத்தகும்

இவ்வூர் தொடக்கத்தில் மதுரைக்குக் கிழக்கில் அமையாது பண்டு பஃறுளியாற்றின் கடற்பகுதியில் இருந்த மணற்புரத்து அமைந்த ஊராதல் வேண்டும் இவ்வூர் பாண்டியன் 'நெடியோன் என்று புகழ்ந்து பாடப்பட்ட நிலந்தரு திருவிற் பாண்டியன் (நிலந்தரு திருவிற் நெடியோன் பாண்டியன் மாகீர்த்தி) காலத்துச் சிறப்பெய்தியிருகக்கூடும். இக்கருத்தினைப் புறப்பாடல் ஒன்று வலியுறுத்துகிறது. அப்பாடல் அடிகள் '' முந்நீர் விழவின் நெடியோன்

நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'' என்பதாம் (புறம்:9:10-11) நெட்டிமையார் என்ற புலவர்பாடிய சிறப்புடைய பஃறுளியாற்றுப் புறத்து அமைந்த மணலூற்புரம்கடல் கோளால் அழிந்து போயிற்று என்பது பிற்காலத்து வரையப்பட்ட சின்னமனூர்,[12] வேள்விக்குடிச்[13] செப்பேடுகள் மூலம் அறியப்படுகிறது கடல் கோளால் அழிந்த ஊர்க்குப்பதிலாக பிற்காலத்து எழுந்ததே. மதுரைக்குக் கிழக்கிலுள்ள மணலூர் ஆதல் வேண்டும். அது போன்றே குமரி மாவட்டத்தில் எழுந்த மணலூர் ஆதல் வேண்டும்.

தமிழில் வழங்கப்பட்ட மணற்புரம் என்ற ஊர்ப்பெயர் வழக்கு (கடற்பகுதியாதல் வேண்டும் பாண்டியர் மீனவர் என்று அழைக்கப்படும் வழக்கும், மீன் கண்களைக் கொண்ட மீனாட்சி நடை பெறும் நாடு என்ற வழக்கும் இக்கருத்தினை வலியுறுத்துவதன்றோ) மணலூற் புரமாகிப், பின் மணலூராகி, அடுத்து மணிபுரமாகிப் பின் மணிநகரமாகி இறுதியில் மணிப்பூராக மாறியிருக்க வேண்டும்.

(தொடரும்)

---

11. மு இராகவையங்கார் ஆராய்ச்சிப்தொகுதி 1938, p 15

கல்கத்தா, ஓ, கல்கத்தா.

பழனி, அரங்கசாமி
மதுரைப் பல்கலைக் கழகம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

நேபாளத் தூதுவரோடு உரையாடிக் கொண்டிருந்த மனநிறைவோடு தேசிய நூலகத்தை நோக்கி நடந்தேன். கல்கத்தாவுக்குச் செல்லுவோர் காணவேண்டிய ஒரு அறிவாலயமாகத் திகழ்வது அந்நூலகம், சுற்றிலும் அழகான புல்வெளி. மணமில்லையாயினும் கவர்ச்சியாகத் தோற்றமளிக்கும் பற்பலவித வண்ணமலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. இவற்றுக்கிடையில் எடுப்பாகத் தோற்றமளிக்கும் இந்த மிகப் பெரிய மாளிகையில் லட்சக்கணக்கான ஆங்கில, இந்திய மொழி நூல்களைச் சேமித்து வைத்துள்ளனர். நம் நாட்டில் வெளியாகும் எந்த ஒரு நூலோ, செய்தித் தாளோ இலவசமாக அனுப்பி வைக்கப்பட வேண்டிய மூன்று இடங்களில் இதுவும் ஒன்று. இந்நூலகக் காப்பாளர் கேட்கும் போதாவது அனுப்பி விடவேண்டும் என்பது சட்டம் நூலகத்தில் குழந்தை இலக்கியப் பிரிவும் வார மாத, இதழ்களுக்கென்று ஒருபிரிவும், அருகில் ஒரு ஐந்து மாடிக் கட்டிடத்தில் தனித்தனியாக இயங்குகின்றன. மொழிப் பிரிவுகளில் தமிழுக்கென்று துணை நூலகராகப் பணி புரிகின்றவரும், மதுரையைச் சார்ந்தவருமான திருமதி. புஷ்ப வேணி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் என்னுடன் பயின்றவர் அவரைக் கண்டு பேசுகின்ற வாய்ப்பு இருபதாண்டுகளுக்குப் பிறகு இப்பயணத்தின் போது ஏற்பட்டது. ஒரு புதுமையான அனுபவம். இவர் தான் எனது ஆய்வின்தொடர்பான செய்திகளை நூலகத்தில் பெறவும். கல்கத்தாவில் தங்கி இருப்பதற்கும் வேண்டுவன செய்தவர். கைநிறையச் சம்பளம் வாங்கினாலும் ஓய்வு பெறுகின்ற காலத்திலாவது தமிழகத்துக்கு வந்து விட வேண்டும் என்ற தணியாத ஆர்வத்தை அவரிடம் யான் கண்டேன். ஒரு வாரத்துக்கு முந்திய தமிழ்த் தினத்தாள் ஒன்றனை மேஜையில் வைத்து ஒரு வரி விடாமல் படித்துக் கொண்டிருக்கிறார். தமிழகத்திற்கும் அவருக்கும் உள்ள இணைப்புப் பாலமே தமிழ்த் தினசரிகள் தான் இவைகள் கல்கத்தா நூலகத்தில் நுழைவதற்குள். நான்கைந்து தினங்கள் ஆகி விடுகின்றன. தினத் தந்தியின் அனைத்துப் பதிப்புகளும் அங்கு சென்று மலையாகக் குவிவது ஒரு பிரச்சனை. ஏறத்தாழத் தாளில் பாதிக்கு மேல் அதில் விளம்பரமாக இருப்பதால், ஏதாவது ஒரு பதிப்பை வைத்துக் கொண்டு மீதத்தை நூலகத்தில் வைத்துக் கொள்ள வேண்டாம் என்ற தமிழ்ப்

பகுதியின் யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டால், தமிழ்ப்பகுதியில் இட நெருக்கடி குறையும். விமானத்தில் பறந்து சென்றாலும் தினமணி இரண்டு நாட்கள் கழித்துதான் கிடைக்கிறது. ஸ்டேட்ஸ்மன் என்ற ஆங்கிலத்தினத்தாளே இங்கு அதிக விற்பனையாகும் நாளிதழ்.

பத்திரிகை அனைத்தையும் முறைப்படி பிரித்து வைக்கின்ற பகுதி சில ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஒரு ஐந்து மாடிக் கட்டிடம். நூலகம் இருக்கின்ற மிகப்பெரிய மாளிகை வங்காள நவாப்புகளின் காலத்தில் ஒரு அரண்மனையாக இருந்தது கல்கத்தா இந்தியத் தலைநகராக இருந்தபோது அந்த அரண்மனை வெள்ளையத் தளபதியின் குடியிருப்பாகவும் இருந்திருக்கிறது. வரலாற்றினைச் சுமந்து கொண்டிருக்கும் முன்னாளைய அரண்மனை தற்போது லட்சக்கணக்கான நூல்களைச் சுமந்து கொண்டிருக்கிறது. மிகப்பெரிய ஹால் ஒன்றனைப் படிக்கும் அறையாக மாற்றியிருக்கிறார்கள். இரண்டு ஓரங்களிலும் மெத்தை போட்ட நாற்காலிகளில் பற்பல கிழடுகள் வசதியாக அமர்ந்து படிக்கின்றனர். நானும் ஓரிரு நாட்கள் அங்கு அமர்ந்து படித்துக்கொண்டே குறிப்புகள் எடுத்தேன். அரைமணி நேரம் டிராம் வண்டியில் பயணம் செய்துவ யிறு புடைக்க உண்டிருந்த தென்னிந்தியச் சாப்ப ட்டு மயக்கத்தில் ஒருநாள் என்னையுமறியாமல் கண்ணயர்ந்து விட்டேன். அரை மணிக்கு மேலிருக்கலாம். மிக இலேசாக தோளில் யாரோ தட்டுவது போலிருந்தது. எதிரே ஒரு நூலகப் பணியாளர் நான் கண்விழித்துப் பார்த்ததும் ஒன்றும் சொல்லாமல் அகன்று விட்டார். இவர் மட்டுமல்ல. நூல் வழங்கு பிரிவில் நூல் பற்றிய குறிப்புகளை எழுதிக்கொடுத்த அரைமணி நேரத்தில் அந் நூல் நமக்கு கிடைக்குமாறு அங்குள்ளோர் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறார்கள். இருப்பினும் ஒரு புதிய நூல் வாங்கிய ஒரு சில வாரங்களுக்குள்ளாவது வாசகரின் கைக்கு வருமாறு செய்ய வேண்டும். தினமும் நூற்றுக்கணக்கான மாணவர்களும், ஆசிரியர்களும், பெரியவர்களும் இங்கு வந்து படிக்கிறார்கள். படிக்கிறோம் என்ற பாவனையில் வந்து போகிற இளம் ஜோடிகளுக்கும் பஞ்சமில்லை நூலகம் இருக்கும் பகுதியில் உணவுக்குத்தான் பஞ்சம். இக்டல்பூர் பக்கம் டிராம் ஏறினால், அலிபூர் காலிகாட் வழியாக ராஷ்பிகாரி அவென்யூ போய்ச்சேர — ஏதேனும் தடையில்லாமல் சென்றால் அரைமணி ஆகும். இங்கு தான் தமிழ் பேசுவோரை காணலாம். தமிழகத்து அரிசி உணவும் இங்கு தான் கிடைக்கிறது. இட்டிலிக்கும், சாம்பாருக்கும் ஏங்கிக் கொண்டு, அவை கிடைக்கும் இடம் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த என்னை ஒரு நாள்

நூலகத்தில் வந்து அழைத்துக் கொண்டு போனவர் கல்கத்தா பல்கலைக் கழக தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். திரு. சித்தலிங்கம் அவர்கள். அங்குள்ள இலக்கிய வட்டாரங்களில் அவரைத் தெரியாதவர் இல்லை. கல்கத்தா தமிழ்ச் சங்கத்திற்கும் கூட்டிச் சென்று தொடர்ந்து இரண்டு நாட்கள் என்னை அங்கு சொற்பொழிவாற்றுமாறும் பணித்து விட்டார். இரண்டு மூன்று தினங்களில் பேராசிரியர் அவர்களின் விருந்தினனாக இருக்கும் பேறு பெற்றேன்.

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தைப் பார்த்திருந்த எனக்கு கல்கத்தாவின் பாரதி தமிழ்ச் சங்கம் சற்று ஏமாற்றத்தையே அளித்தது. சியான் பகுதியில் மிகப் பெரிய மூன்று மாடிக் கட்டிடமே பம்பாய் தமிழ்ச் சங்கம் பாரதி தமிழ்ச் சங்கமோ ஒரு கட்டிடத்தின் கீழ்ப்-பகுதியில் ஒண்டிக் கொண்டிருக்கிறது. ஆயினும் பாரதி தமிழ்ச் சங்கத்தாரின் தமிழார்வத்திற்கும் பணிக்கும் குறைவில்லை. அழகிய சிறு நூலகம் வைத்துள்ளனர். அங்குள்ள தமிழ் பேசுவோருக்கு சங்கம் ஒரு கலாச்சார மையமாகவும் விளங்குகிறது. அந்தப்பகுதியில் லேக் ரோடு என்ற நீண்ட தெருவினை பாரதி ரோடு என்று மேற்கு வங்க அரசினர் மாற்றுவதற்கும் தமிழ்ச்சங்க அன்பர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். சங்கம் வாரந்தோறும் இலக்கிய வகுப்புகள் நடத்துகின்றது. அந்தப்பணியிலும், சங்கத்தின் இலக்கிய பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள டாக்டர். சித்தலிங்கம் ஜாதவ்பூர் பல்கலைக் கழகத்திற்கும் என்னை ஆற்றுப்படுத்தினார்.

கல்கத்தா நகரத்திற்குள்ளேயே ஜாதவ்பூர் பல்கலைக்கழகமும் அமைந்துள்ளது. அங்கு மாநில அரசின் உதவியோடு வங்க மொழி அகராதி ஒன்றைத் தொகுத்துக் கொண்டுள்ளார்கள். அதற்காக அமைக்கப்பட்ட குழுவில் டாக்டர் சித்தலிங்கமும் ஒரு உறுப்பினர். குழுவின் தலைவரான ஒப்பிலக்கியப் பேராசிரியர் ஜகன்னாத சக்கரவர்த்தியை ஒருநாள் மாலையில் கண்டு உரையாடிக் கொண்டிருந்தேன். உலகளாவிய பெருமையுடையவர் என்றாலும் கற்றுணர்ந்-தடங்கிய சான்றாண்மையின் உருவமாக அவர் திகழ்கிறார். வில்சன் நைட் என்ற ஆங்கிலத் திறனாய்வாளர் ஷேக்ஸ்பியர் நாடகங் களைத் திறம்படக் கற்றவர். லண்டனில் ஒரு நிகழ்ச்சி அதற்குத் தலைமை தாங்க வந்த "வில்சன் நைட் அவர்களை இரண்டு பேர் கைத் தாங்கலாகக் கூட்டி வந்து உரிய ஆசனத்தில் அமர்த்தினார்கள். தொண்ணூறுக்கு மேற்பட்ட தள்ளாத வயது. இருப்பினும் தலைமை

வகித்துப் பேசுதற்கு மேஜையைப் பிடித்துக் கொண்டு எழுந்து நின்றவர் ஒரு மணிக்குக் குறையாமல் சரளமாகப் பேசிக் கொண்டிருந்தார். ஷேக்ஸ்பியரிலிருந்து மேற்கோள்கள் தங்கு தடையின்றி வந்தன. நாடக இலக்கிய நயம் பற்றி பேசும்போது தண்டு ஊன்றி நடக்கும் தள்ளாத வயது எங்கு போயிற்றென்றே தெரியவில்லை. நான் மறக்கமுடியாத நிகழ்ச்சி இது' என்று பேராசிரியர் நினைவு கூர்ந்தார்.

அவர் தலைமையில் பணியாற்றும் குழுவினர் வங்க மொழி அகராதி ஒன்றனைத் தொகுக்கின்றனர். ஒரு சொல்லை எடுத்து, அதனை உச்சரிக்கும் முறை, அதன் வேர்ச்சொல், அதன் பொருள், அச்சொல் காலந்தோறும் வெவ்வேறு பொருளில் வந்திருந்தால். அந்தக் குறிப்பு அவ்வவற்றிற்குரிய பல்வேறு இலக்கிய மேற்கோள் என்று இப்படி ஒவ்வொரு சொல்லைப் பற்றியும் அனைத்துக் குறிப்புகளும் அடங்கிய ஒரு சொற்களஞ்சியமாக அந்த அகராதி திகழும் என்று தெரிகின்றது. ஆங்கிலத்தில் ஆக்ஸ்போர்டு நிறுவனத்தினர் 15 தொகுதிகளாக ஆங்கில அகராதி ஒன்றனை வெளியிட்டுள்ளனர். தமிழ் மொழியின் ஆக்கத்திற்கு என்று நமது மாநில அரசினரும் இத்தகைய பணியினை மேற் கொள்ளலாம். இந்த அரிய பணியில் தன்னையும் ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தமை குறித்துப் பேராசிரியர் மகிழ்ச்சியடைந்தார். அவரிடமிருந்து விடைபெற்று எனது அறைக்கு வந்த போது இரவு மணி பத்து.

அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த கட்டாக் பேராசிரியர் பவானி பிரசாத் கண்களைக் கசக்கிக் கொண்டு கதவைத் திறந்தார். நகரில் பனி மூட்டம் போட்டுக் கொண்டிருந்த அந்நாட்களில் இவர் எனது அறை நண்பராக வாய்த்தது நல்லதாகப் போயிற்று. ஜன்னல்களை மூடிவிட்டுப் படுக்கையில் இருந்து கொண்டே புகைக்கின்ற பேராசிரியர் மகாபத்ரா தனது அறைக்கு வராமல், நான் அவரது அறை நண்பராக இருந்தது பற்றி அவருக்கும் மகிழ்ச்சி. நானும் பவானியும் ஒருநாள் மாலை 7-மணியளவில். காளி கோவிலைப் பார்க்கச் சென்றோம். இரவு எட்டுமணிக்கு மேல் காளி கோவில் பக்கம் போக வேண்டாம் என்று என்னிடம் பலர் சொல்லியிருந்தார்கள். மொழிப் பிரச்னை வேறு. வங்க மொழி தெரிந்த பவானி பிரசாத் வந்ததனால் அந்தப்பிரச்னை இல்லை.

கல்கத்தாவில் புகழ்பெற்ற காளி கோவில் தமிழகத்துக் கோவில்களைப் போன்ற எடுப்பான தோற்றமோ, கலை நுணுக்கம்

கொண்டதோ, சிறந்த சிலை அமைப்பினைக் கொண்டதோ அல்ல. தோற்றத்தில் சிறிய கோவில் தான்.

கருவறைக்குள் இருக்கும் காளி லிங்க உருவில் அமைந்துள்ளது—கண்களை அகல விழித்துக் கொண்டு காலிலே ஒரு உருவத்தை மிதித்துக் கொண்டு இரத்தச் சிவப்புடன் கூடிய நாக்கு வெளியில் தொங்கிக் கொண்டு, பார்ப்பதற்கே அச்சுறுத்தும் தோற்றம். இந்தக்காளியின் மூலஸ்தானத்திற்கு எதிரே அன்றாடம் காலையில் வெள்ளாடுகள் பலி கொடுக்கப்படுகின்றன. ஏன் இப்படி கொடுமையின் சின்னமாகக் காளி உருவம் படைக்கப்பட்டுள்ளது? ஆண்டவன் அன்பின் உறைவிடமாகவும் அருளின் பிறப்பிடமாகவும் அல்லவா இருக்க வேண்டும்?

ஆடுகளைப் பலி வாங்குகின்ற காளியை பிராமணர்கள் உட்பட இந்து மதத்தின் எல்லாப்பிரிவினரும் வந்து வணங்குகின்றனர். கல்கத்தாவில் உள்ள பிராமணர்கள் அன்றாடம் மீன் சாப்பிடுபவர்கள். மீனை அவர்கள் 'கங்கா புஷ்டம்' என்கின்றனர். உண்ணுவோரின் பழக்கத்தையும், விருப்பத்தையும் பொறுத்ததே உணவு அதில் ஜாதியை இணைத்துப் பேசுவது தவறு என்ற உண்மை இங்கு வெளிப்படையாகத் தெரிகிறது. நான் நினைத்தது போல காளி கொடுமையின் சின்னம் இல்லை. இதற்கு ஒரு விளக்கம் கிடைத்தது

"ஒரு காலத்தில் தீவினையை அழிக்கும் பெரு முயற்சியில் காளி அனைத்தையும் நிர்மூலமாக்கத் தொடங்கிவிட்டாள். அந்த வேகத்தை மட்டுப்படுத்தாவிட்டால் உலகமே அழிந்து விடும் நிலை. இறைவனிடம் முறையிட்டபோது இறைவனுக்கே ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. காளியின் சீற்றம் தீயாக்கினியாகப் பறந்தது. நயமுறச் சொல்வதற்கே வழியில்லை. சீறிப் பொங்கியெழுந்து, பீறிட்டு வரும் காளியின் ஆத்திரத்தை நிறுத்த ஒரே ஒரு வழிதான் இறைவனுக்குப் பட்டது. நிர்மூல நடனமாடி வரும் காளியின் எதிரில் தானே விழுந்து விடுகிறார். வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் ஆண்டவனையும் மிதித்த பிறகே காளிக்கு தன்னுணர்வு வருகிறது. 'ஆ! என்ன தவறு செய்து விட்டோம்!" என்ற அச்சத்திலும், அதிர்ச்சியிலும் காணப்படுகின்ற காளியே கர்ப்பகிருகத்தில் உள்ளது."

இந்த விளக்கத்தைக் கேட்டுக் கொண்டே வெளியில் வந்தோம். கோவிலுக்குச் செல்லும்வழி குறுகலான ஒரு கடைத்தெரு. வளையல் பாசிமணி, லிங்கம், பூசைப் பொருள்கள் விற்கின்ற கடைகளே மிகுதி

கல்கத்தா, ஓ, கல்கத்தா.

பழனி, அரங்கசாமி
மதுரைப் பல்கலைக் கழகம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

நேபாளத் தூதுவரோடு உரையாடிக் கொண்டிருந்த மனநிறைவோடு தேசிய நூலகத்தை நோக்கி நடந்தேன். கல்கத்தாவுக்குச் செல்லுவோர் காணவேண்டிய ஒரு அறிவாலயமாகத் திகழ்வது அந்நூலகம். சுற்றிலும் அழகான புல்வெளி. மணமில்லையாயினும் கவர்ச்சியாகத் தோற்றமளிக்கும் பற்பலவித வண்ணமலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. இவற்றுக்கிடையில் எடுப்பாகத் தோற்றமளிக்கும் இந்த மிகப் பெரிய மாளிகையில் லட்சக்கணக்கான ஆங்கில, இந்திய மொழி நூல்களைச் சேமித்து வைத்துள்ளனர். நம் நாட்டில் வெளியாகும் எந்த ஒரு நூலோ, செய்தித் தாளோ இலவசமாக அனுப்பி வைக்கப்பட வேண்டிய மூன்று இடங்களில் இதுவும் ஒன்று. இந்நூலகக் காப்பாளர் கேட்கும் போதாவது அனுப்பி விடவேண்டும் என்பது சட்டம் நூலகத்தில் குழந்தை இலக்கியப் பிரிவும் வார மாத, இதழ்களுக்கென்று ஒருபிரிவும், அருகில் ஒரு ஐந்து மாடிக் கட்டிடத்தில் தனித்தனியாக இயங்குகின்றன. மொழிப் பிரிவுகளில் தமிழுக்கென்று துணை நூலகராகப் பணி புரிகின்ற வரும், மதுரையைச் சார்ந்தவருமான திருமதி. புஷ்ப வேணி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் என்னுடன் பயின்றவர் அவரைக் கண்டு பேசுகின்ற வாய்ப்பு இருபதாண்டுகளுக்குப் பிறகு இப்பயணத்தின் போது ஏற்பட்டது. ஒரு புதுமையான அனுபவம். இவர் தான் எனது ஆய்வின்தொடர்பான செய்திகளை நூலகத்தில் பெறவும். கல்கத்தாவில் தங்கி இருப்பதற்கும் வேண்டுவன செய்தவர். கைநிறையச் சம்பளம் வாங்கினாலும் ஓய்வு பெறுகின்ற காலத்திலாவது தமிழகத்துக்கு வந்து விட வேண்டும் என்ற தணியாத ஆர்வத்தை அவரிடம் யான் கண்டேன். ஒரு வாரத்துக்கு முந்திய தமிழ்த் தினத்தாள் ஒன்றனை மேஜையில் வைத்து ஒரு வரி விடாமல் படித்துக் கொண்டிருக்கிறார். தமிழகத்திற்கும் அவருக்கும் உள்ள இணைப்புப் பாலமே தமிழ்த் தினசரிகள் தான் இவைகள் கல்கத்தா நூலகத்தில் நுழைவதற்குள். நான்கைந்து தினங்கள் ஆகி விடுகின்றன. தினத் தந்தியின் அனைத்துப் பதிப்புகளும் அங்கு சென்று மலையாகக் குவிவது ஒரு பிரச்சனை. ஏறத்தாழத் தாளில் பாதிக்கு மேல் அதில் விளம்பரமாக இருப்பதால், ஏதாவது ஒரு பதிப்பை வைத்துக் கொண்டு மீதத்தை நூலகத்தில் வைத்துக் கொள்ள வேண்டாம் என்ற தமிழ்ப்

கரையில் தான் விரும்பியவாறு ஒரு காளிகோவிலை நிர்மாணித்துக் கொண்டு நிட்டையில் அமர்ந்தார் பகவான் இராமகிருஷ்ணர். அன்னை காளியே இங்கு இராமகிருஷ்ணருக்குக் காட்சி கொடுத்ததாகக் கூறப்படுகிறது. இங்கு உயிர்ப்பலி கொடுபபதில்லை. தெய்வீக மணம் கமழும் அமைதியான இடம். கோவிலுக்குள் நுழைவதற்கு முன் கங்கை நதியின் படித்துறையில் இறங்கி கால், கை கழுவினோம் நீர்த்துறையில் நின்று கொண்டு கல்கத்தாவைப் பார்த்தேன். ஒரே புகைமயம். அதில் ஒன்றும் வியப்பில்லை எங்களைக் கூட்டிவந்த நண்பர் ஒருவரின் கார் சித்தரஞ்சன் அவென்யூ முடிந்ததும் பாரக்பூர் ரோடு வழியாக வந்தபோது ஏறத்தாழ ஐந்துமைல் தூரம் மெல்லிய கரும்புகைப்படலத்தினைக் கிழித்துக் கொண்டு தான் வந்தது. நிலக்கரியினால் இயங்கும் சிறு சிறு தொழிற் சாலைகள் வழிநெடுகிலும் இருக்கின்றன.

ராமகிருஷ்ணர் தட்சிணேஸ்வரத்துக்கு வந்தபோது மிகவும் அமைதியானசூழ்நிலை இருந்திருக்கவேண்டும் ராமகிருஷ்ணர்இருந்த அறை, படுக்கை, பயன்படுத்திய பொருட்கள் ஆகியவற்றை இன்றும் பாதுகாத்து வைத்துள்ளார்கள். இங்குள்ள காளி மாதாவின் கருவறை மண்டபத்தைச் சுற்றி சிறு லிங்கங்கள் உள்ளன. வழிபடுவோர் லிங்கத்தைத் தொட்டுக்கும்பிடுவது எனக்குப் புதுமையாக இருந்தது. கங்கையின் நேர் எதிர்க்கரையில் பேலூரில் விவேகாநந்தர் ஏற்றி வைத்த இராமகிருஷ்ணமடம் ஒளிவிளக்காகத் திகழ்கிறது. மடத்தின் அருகில் கல்லூரி, மடத்துத் தலைமை நிலையம், அடியார்களின் இருப்பிடங்கள் ஆகியன உள்ளன. 'பயனுள்ள ஒரு பயணம்' செய்தோம் என்ற எண்ணத்தில் மீண்டும் கார் ஏறி ஹௌரா வழியாக நகருக்குள் வந்து சேர்ந்தோம் கார்டிரைவருக்கும் அவரது உதவியாளனுக்கும் சிற்றுண்டி வாங்கிக் கொடுகக எண்ணி எஸ்பிளனேட் பகுதியில் காரை நிறுத்தச் சொன்னோம். 'மதராஸி ஹோட்டல்' எனும் சிற்றுண்டிச்சாலையில் வடை ஒரு ரூபாயும். இட்டலி அறுபதுபைசாவும், தோசை ஒன்றேமுக்கால் ரூபாயும் என்று போட்டிருந்தார்கள். இந்த நகரத்தில் எதுதான் மலிவு என்று எண்ணிப்பார்த்தேன். காய்கறிச் சந்தையில் 3 கிலோஎடை இருக்கக் கூடிய காலிபிளவர் ஒன்றரை ரூபாய் என்றான். முத்து முத்தான பட்டாணியும் கொள்ளைமலிவு. கிலோ ஒருரூபாய் டார்ஜிலிங் டீ என்று ஏராளமான கடைகளில் விற்கப்படுகிறது விலை இங்குள்ளது போல் தான்.

மூன்று வாரங்கள் தங்கியபிறகு கசப்பான அனுபவம் ஏதாவது இருக்கிறதா என்று சென்னைக்குத் திரும்பும் போது எண்ணிப் பார்த்தேன் பம்பாயிலே கூட இழந்த பொருளை ஒரு மணி நேரத்தில் மீட்டு விட்டேன். நம்ப முடியாத அதிசயம்தான். என் மனைவியும் என்னைப் பற்றி பெருமைப்பட்டுக் கொண்டாள் எல்லாவற்றிற்கும் பழிவாங்குவது போன்று இங்கு ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டது. எனது கவனக் குறைவிற்கு அது ஒரு தண்டனை என்று தான் எண்ணிக் கொண்டேன். ஒரு நாள் காலை ஒன்பது மணியளவில் பஸ்ஸில் நெருக்கி அடித்துக் கொண்டு ஏறினேன் நூலகத்திற்கு வந்து இறங்கி பேன்டின் பின்புற இடுப்புப் பையைத் துழாவினேன். பைகாலி! ஒற்றை நூறு ரூபாய் நோட்டு யார் கையிலோ! கல்கத்தாவில் கடவுளால் கூட மீட்க முடியாதே! யாரிடம் சொல்ல! சில நாட்கள் வெட்கத்திற்கு அஞ்சி யாரிடமும் இதைப் பற்றிப் பேசவில்லை. பிறகு தான் தெரிந்தது கல்கத்தாக்காரர்கள் யாரும் எந்தப் பையிலும் ரூபாய் நோட்டுகளை வைத்துக் கொள்வதில்லை. வயிற்றுக்கு நேரே பேன்டின் இடுப்புப் பட்டியில் ஒரு சிறுபை ஒன்று தைத்து அதில்தான் நோட்டுக்களை மடக்கி வைத்துக் கொள்ளுகிறார்கள். இந்த அனுபவ பூர்வமான செய்தி முன்னமேயே தெரிந்திருந்தால், நான் பணத்தை இழந்திருக்க மாட்டேன். கட்டுரையைப் படிக்கின்ற யாரும் கல்கத்தாவுக்குப் போகும் போது என்னைப்போல் வருத்தப்படக் கூடாதே என்ற ஆர்வத்தில் இதனைக் கட்டுரையின் கடைசிப் பகுதியில் குறிப்பிடுகிறேன்.

— ஒரு புதிர் —

''ஐந்தும் மூன்றும் ஒன்றானால், அறியாப்
பெண்ணும் கறிசமைப்பாள்''

— இந்த வாக்கியம் பழமொழியா? விடுகதையா? இலக்கிய மேற்கோளா? இவற்றுள் எவையேனும் ஆயின், இதற்கு விளக்கம் என்ன? விடையினையும், விளக்கத்தினையும் தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதி அனுப்புமாறு வாசகர்களை வேண்டுகிறோம். அடுத்து வருகின்ற 'செந்தமிழ்' இதழில் இவை வெளியிடப்பெறும்.

—ஆசிரியர்

ஓர் அறிவிப்பு

கடந்த எண்பது ஆண்டுகளாக வெளி வரும் 'செந்தமிழ்' பற்பல ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள், நாடகம் ஆகிய அனைத்தையும் தன்னுளடக்கிய ஒரு அறிவுப் பெட்டகமாய்த் திகழ்கிறது. செந்தமிழின் பழைய இதழ்களையும் இன்று காறும் அறிஞர் விரும்பிக் கேட்கின்றனர் நூற்றுக் கணக்கான தலைப்பு களில் வெளிவந்துள்ள கட்டுரையினையோ விளக்கத்தினையோ காண வேண்டுமாயின், ஒவ்வொன்றாகப் தொகுதிகள் அனைத்தையும், புரட்டிப் பார்க்க வேண்டிய தொல்லையின்றி, கட்டுரைகளின் தலைப்புகளையும் எழுதியோர் பெயரையும் தொகுதி பகுதி வாரியாகப் பிரித்து கருத்து விளக்கக் கையேடாக அமைந்த

செந்தமிழ் தொகுதிகள் - அட்டவணைக் குறிப்பு

அண்மையில் வெளிடயிப்பட்டுள்ளது.

விலை ரூ 5/-

பக்கங்கள் 300 —$8\frac{1}{2}'' \times 5\frac{1}{2}''$ அளவு— இலக்கிய அன்பர்களும், அறிஞர்களும், ஆராய்ச்சி மாணவர்களும், பொது மக்களும் அட்டவணைக் குறிப்பினை வாங்கிப் பயனடைய வேண்டுகிறோம்.

விபரங்கட்கு,

ஆசிரியர், செந்தமிழ்

தமிழ்ச் சங்கச்சாலை, மதுரை—1.

வர்ப்பெற்றேம்

சபாநாயகன்

மேடை உலக மாத இதழ்

ஆசிரியர் — கே. ரேணுதேவி
— 20, ஸ்டேஷன் ரோடு, சென்னை-33.

பண்டைத் தமிழில் நாடக இலக்கணங்கள் இருந்தமைக்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. ஆனால் நாடகங்கள் தான்இல்லை. தமிழ் இலக்கியத்தில், மனோன்மணியத்துக்குப் பிறகுதான் நாடகங்கள் வெளிவரத் தொடங்கின. மனோன்மணியமும் படிப்பதற்குத்தான் எழுதப்பட்டதே தவிர நடிப்பதற்கு அல்ல. நடிப்பதற்கென்று ஏறத்தாழ நூறு நாடகங்களை எழுதிய பெருமை பம்மல் சம்பந்த முதலியாருக்கு உரியது. சங்கரதாஸ் சுவாமிகள் புராண, இதிகாச நாடகங்களை எழுதியவர். அண்மைக் காலம் வரை நவாப் இராஜமாணிக்கம், டி. கே. எஸ். சகோதரர்கள் நாடக உலகிற்குப் பெருமை சேர்த்தவர்கள். கடந்த ஐம்பதாண்டுகளாக இயங்கிவரும் திரைப்படமோ, இற்றைக் காலத்திய தொலைக்காட்சியோ (TV) நாடகத்தை நலிவுறச் செய்ய முடியவில்லை. பாரம்பரியம் மிக்க இந்தத் தமிழ் நாடகக் கலைக்கென்று ஒரு மாத இதழ் மாம்பலத்திலிருந்து வெளிவருவது பாராட்டுதலுக்குரியது. கவர்ச்சியான அட்டைகளையும், விரச உணர்வைத்தூண்டும் கதைகளையும் தாங்கி வரும் வார, மாத இதழ்கள் நிறைய வெளிவருகின்ற இந்நாட்களில், தமிழ் நாடகத்துக்கென்று ஒரு மாத இதழைத் தரமாக நடத்துவது ஒரு சாதனை. பத்திரிகை உலகில் இப்படியொரு அரும்பணி புரிந்துவரும் பெருந்தகையாளர் ரேணுதேவி புதுவைக்கு அருகில் ஒரு வேளாண் குடும்பத்தில் பிறந்தவர். சென்னையிலிருந்து யார் உதவியுமின்றி இம்மாத இதழைத் தொடர்ந்து நடத்திவரும் அவருக்கு கலை நிறுவனங்களும் நாடக மன்றங்களும் அரசினரும் காலத்தான் உதவுதல் வேண்டும். நாடக நிகழ்ச்சிகளோடு, கதை, கட்டுரை கவிதை ஆகியனவும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. அம்மையார் ரேணுதேவி எழுதும் தொடர் நாடகத்தில் ஆங்கில வரிகள் அப்படியே அச்சிடப்பட்டுள்ளன. ஜன ரஞ்சகத்திற்காகவும், சமுதாயத்தின் மேட்டுக்குடி வாழ்க்கையினை அப்பட்டமாக வெளிப்படுத்துவதற்காகவும், ஆங்கிலச் சொற்களை அங்கங்கே தமிழில் கலந்து பேசச் செய்கின்ற புதிய மரபு. காலத்தைவென்று நிற்க முடியாது. எனவே அம்மையாரின் தொடர் நாடகத்தில் ஆங்கில வரிகளை அப்படியே அச்சிடுவதைத் தவிர்க்கலாம் நாடக மேடைச் 'சபாநாயகன்' இளமைப் பொலிவோடு நலம்பல பெற்று வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

கொட்டும் மழை

பழனி. அரங்கசாமி:

கொட்டும் மழையே கொள்ளை அழகு!
கோடைத் வெப்பமும் வாடைத் தூசியும்
ஆடி அடங்கிட அகம் குளிர்ந்திடக்
கொட்டும் மழையே கொள்ளை அழகு!

பாயும் குதிரையின் குளம்படியெனவே
பட பட வென்றே கூரையில் கொட்டித்
தூம்பும் தொளையும் தொடர்ந்து ஒழுகிடும்
குளிர்ந்த மழையே கொள்ளை அழகு!

சர் சர் ரென்றே சாளரம் சாடிடும்!
சகதியைப் பண்ணும்! சாக்கடை நிரப்பும்!
விண்ணே இடிந்து வீழ்தல் போலே
விர் விர் என்றே சீறிக் கொட்டும்!
வீதிகள் தோறும் நதியென மாறும்.
விரைந்து பொழியும் மழையே வாழி!

H. W. Longfellow என்பார் 19-ஆம் நூற்றுண்டு அமெரிக்கக் கவிஞர். இது ‘How Beautiful is the rain’ எனும் அவரது கவிதையின் தமிழாக்கம்.

மணியம் பிரஸ்,
44-B, வெங்கடபதி அய்யங்கார் தெரு.
மதுரை-9.